உலக வரலாற்றில் முதன்முறையாக e-mail இல் வெளிவரும் இதழ்

www.aanmeegamalar.com
e-magazine
வெளியிடும்

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-8 இதழ்-195

ஜுலை 16-31 2026



## புரி ஜெகன்நாதர் தேரின் சிறப்புகள்

e-magazine

e-magazine

ஆகம வழிபாடு, பூஜாவிதி இல்லை
எளிய மக்களின் வழிபாட்டடை ஏற்கும்

# மாரியம்மன் வழிபாடு

# காசிக்கு நிகரான பைரவர் தலம் திருமணக் கோலத்தில் அருளும்

# பால்வெண்ணநாதர்!

e-magazine
aanmeegamalar.com

சிதம்பரம் அருகே சிவபுரியில் அமைந்துள்ள, தேவாரப் பாடல் பெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அருள்மிகு பால்வண்ணநாதர் (திருகழிப்பாலை).

இங்குள்ள மூலவர் சிவபெருமான் சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார். காமதேனுவின் பாலில், கபில முனிவர் மணலால் செய்த லிங்கம் என்பதால், இன்றும் பால் போன்ற வெண்மை நிறத்துடன் காட்சியளிப்பது இதன் தனிச்சிறப்பு!

மூலவர் லிங்கத் திருமேனிக்கு நேர்பின்புறத் தில், சிவபெருமானும் பார்வதி தேவியும் தங்களின் நல்மங்கல திருமணக் கோலத்தில் எழுந்தருளி பக்தர்களுக்குக் காட்சியளிக்கின்றனர். அகஸ்திய முனிவருக்கு இறைவன் திருமணத் தரிசனம் தந்த தலம் இது! aanmeegamalar.com

முற்காலத்தில் மன்னன் ஒருவன் குதிரையில் வந்தபோது, எதிர்பாராமல் குதிரையின் கால் பட்டு லிங்கத்தின் மேல் பகுதி பிளந்தது. அந்தப் பிளந்த வடு இன்றும் லிங்கத்தில் காணப்படுகிறது. இந்தத் திருமேனிக்குத்தான் நித்திய பூஜைகள் நடக்கின்றன. aanmeegamalar.com

இக்கோயிலை மக்கள் "பைரவர் கோயில்" என்றும் அழைக்கிறார்கள். காசியில் இருப் பது போலவே இங்கும் பைரவர் நாய் வாகனம் இல்லாமல் காட்சியளிக்கிறார். aanmeegamalar.com

சடாமுடி, சிங்கப் பல், பூணூல், நாகாபரணம் மற்றும் 27 மண்டை ஓடுகள் கொண்ட மாலையுடன் கம்பீரமாக அருள்கிறார். காசிக்குச் செல்ல முடியாதவர்கள் இங்குள்ள பைரவரை தேய்பிறை அஷ்டமியில் வழிபட்டால் காசிக்கு நிகரான பலன் கிட்டும்! இத்தல பால்வண்ணநாதருக்கு அபி ஷேகம் செய்யப்படும் பாலை அருந்தினால், நீண்ட நாட்களாகக் குழந்[illegible]பாக்கியம் இல்லாதவர்களுக்குப் புத்திர பாக்கியம் கிட்டும் என்பது பக்தர்களின் தீராத நம்பிக்கை.

மேலும், தீவிரமான உடல் வெப்ப நோய்களால் அவதிப்படுபவர்கள் இங்கு வந்து வேண்டிக்கொள்ள நோய் குணமாகிறது. aanmeegamalar.com

சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவராலும் பாடப்பட்ட இத்தலத்தின் அருளைப் பெற, வாழ்நாளில் ஒருமுறையாவது தரிசிக்க வேண்டிய தலம் சிவபுரி பால்வண்ணநாதர் திருக்கோயில்!






# சிவனும் சக்தியும் ஒன்றே எனும் தத்துவத்தை பிருங்கி முனிவருக்கு அருளிய ஸ்தலம்



தீவிர சிவபக்தராக திகழ்ந்த பிருங்கி முனிவரின் ஜீவசமாதி, திருவெண்டுறை என்ற திருவண்டு துறை ஸ்தலத்தில் உள்ளது. இத்தலத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானை, வண்டுறைநாதர் (மதுவனேஸ்வரர்) என்றும், தாயாரை, வேனெடுங் கண்ணி அம்மன் (பிரகதாம்பாள்) என்றும் அழைக்கின்றனர்.

இத்திருக்கோயில், திருஞானசம்பந்தரால் தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் காவிரி தென் கரைத் தலங்களில் 112ஆவது சிவத்தலமாக விளங்குகிறது.

aanmeegamalar.com

இத்தலத்திலுள்ள கருவறையில் தான் பிருங்கி முனிவர் ஜீவசமாதி உள்ளது. அதன் மீதுதான் வண்டுறைநாதர் லிங்கம் அமைய பெற்றுள்ளது.

பிருங்கி முனிவர் வண்டு உருவில் இறைவனை மட்டும் வலம் வந்த திருத்தலம். இந்த கோவிலில், பிருங்கி முனிவருக்கு சிவபெருமான் நந்தி ரூபத்தில் காட்சியளித்துள்ளார்.

பிருங்கி முனிவர் என்பவர் சிவனைத்தவிர வேறு தெய்வத்தை வழிபடக்கூடாது என்ற வைராக்கியத்துடன் இருந்தார். இதையறிந்த பார்வதி, அம்முனிவரின் உடலில் சக்தியாக உள்ள ரத்தம், சதை ஆகியவற்றை நீங்க செய்தார். உடல் தள்ளாடிய நிலையிலும் முனிவர் சிவனை தொடர்ந்து வழிபாடு செய்தார். சிவன் முனிவருக்கு அருள்புரிந்தார். இதனால் பார்வதி, சிவனை வழிபட்டு அவரது இடது பாகம் பெற்றார். சிவனும் சக்தியும் பிரிக்க



aanmeegamalar.com
aanmeegamalar.com
e-magazine
aanmeegamalar.com

e-magazine






முடியாதவர்கள் என்பதை உணராத முனிவர், வண்டு உருவம் எடுத்து, அர்த்தநாரீஸ்வர திருமேனியில் ஒரு பாதியை துளைத்து கொண்டு சிவனை மட்டும் வணங்கினார். கோபமடைந்த பார்வதி பிருங்கி முனிவரை வண்டு உருவாகவே இருக்கும் படி சாபமிட்டார்.

மனம் வருந்திய முனிவர் சாப விமோசனம் வேண்டினார். மனமிறங்கிய பார்வதி, “சக்தியின்றி சிவமில்லை. சிவனின்றி சக்தியில்லை, திருவண்டு துறைத் தலத்தில் எங்கள் இருவரையும் இணைத்து வழிபாடு செய்து சாபவிமோசனம் பெறுக” என அருள்புரிந்தார்.

பிருங்கிமுனிவர் வண்டு உருவில் வழிபாடு செய்ததால் இத்தலம் “திருவண்டுதுறை’ ஆனது. இப்போதும் கூட சிவன் சன்னதியில் வண்டு ஒலி கேட்கிறது என்கிறார்கள். பிருங்கி முனிவர் சமாதி மூலஸ்தானத்தில் உள்ளது. aanmeegamalar.com

பிரம்மனுக்கு படைப்புத் தொழிலில் தடை ஏற்பட்டபொழுது இங்கு உமையொருபாகனாகிய சிவபெருமானை வழிபட்டு ஆணையும், பெண்ணையும் தடையின்றிப் படைக்கும் ஆற்றல் பெற்றான் என்று கூறப்படுகிறது.

சிவனும் சக்தியும் பிரித்தற்கரியவர் என்ற உணமையை உணராத மகாவிஷ்ணு மகப்பேறு வேண்டி சிவபெருமானை மட்டும் வழிபட்டு அழகிய மன்மதனை மகனாகப் பெற்றார். இதனால் கோபம் கொண்ட சக்தி மன்மதன் சிவபெருமானின் நெற்றிக் கண்ணால் எரிந்து அழியுமாறு சாபமிட்டார்.

ஆன்மிகமலர்

தவறை உணர்ந்த மகாவிஷ்ணு இவ்வாலயத்தில் விநாயகர், சோமஸ்கந்தர் ஆகியோரை வழிபட சக்தி சினம் தணிந்து இறக்கும் மன்மதன் மீண்டும் பிழைத்தெழுவான் என்று வரம் அளித்ததாகவும் கூறப்படுகிறது. திருமால் இத்தல சிவனை பூஜித்து சிவபூஜையின் சிறப்பை உலகிற்கு எடுத்து காட்டினார்.

அர்த்தநாரீஸ்வரர் திருமேனி விசேஷமானது. மாதொருபாகனின் வாகனத்தை உற்று நோக்கினால் இறைவன் உருவம் உள்ள பகுதியில் ரிஷப வாகனமாகவும், இறைவியின் உருவம் உள்ள பகுதியில் சிம்ம வாகனமாகவும் இருப்பதைப் பார்க்கலாம். aanmeegamalar.com

ஆலயத்தின் உள்ளே தலமரமான வில்வ விருட்சம் உள்ளது. ஆலய தீர்த்தம் பிரம தீர்த்தம் ஆலயத்திற்கு வெளியே வடகிழக்கில் உள்ளது.

திருஞானசம்பந்தர் இத்தலத்து இறைவன் மேல் பாடியருளிய பதிகம் மூன்றாம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது. சிவபெருமான் யமனை உதைத்தது, திரிபுரம் எரித்தது, இராவணன் கயிலை மலையை எடுத்தது, திருமால் பிரம்மா அடிமுடி காண முடியாமல் அரிதாய் விளங்கியது முதலிய புராண வரலாறுகள் இப்பதிகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இறைவனின் பெருமையைக் கூறி ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் இறைவன் விரும்பும் இடம் திருவெண்டுறை என்று நிறைவு செய்கிறார்.

துருவ மன்னன், அங்கவன், அரிச்சந்திரன், முசுகுந்த சோழனின் மகன் தியாகசோழன் ஆகியோரும் இங்கு வழிபாடு செய்துள்ளனர்.

நங்கை எனும் பெண்முனிவருக்கு இத்தலத்தின் மண்ணெல்லாம் சிவலிங்கங்களாக தோன்ற, அதன் மேல் கால் வைக்க கூடாது என்பதால் வடதிசை நோக்கி நின்று வணங்கினாராம். இதன் காரணமாக இங்கு நடுமண்டபத்தில் உள்ள நந்தி வடதிசையை பார்ப்பதாக ஐதீகம்.

aanmeegamalar.com

# மரணத்தின் மீது பயம் தேவையா?

## கருடனுக்கு விளக்கிய காகபுஷுண்டி

உலகில் எண்ணற்ற உயிர்கள் பிறந்து வாழ்ந்து இறக்கின்றன. சிலர் அறநெறியில் வாழ்ந்தும் துன்பங்களை அனுபவிக்கிறார்கள். சிலர் அதர்ம வழியில் நடந்தும் சுகமாக வாழ்வது போல் தெரிகிறது. பிறப்பு, இறப்பு, கர்மா, விதி, முக்தி ஆகியவற்றின் உண்மையான ரகசியம் என்ன? மரணத்தை யாராலும் வெல்ல முடியுமா? ஆத்மாவின் பயணம் எவ்வாறு தொடர் கிறது? என்ற எண்ணங்கள் அவன் மனதை ஆட்கொண்டன.



இந்தச் சந்தேகங்களுக்கு விடை தேடி கருடன் பல மகரிஷிகளையும், சித்தர்களையும், தேவர்களையும் சந்தித்தான். ஒவ்வொருவரும் தங்களுக்குத் தெரிந்த ஞானத்தை எடுத்துரைத்தாலும், அவனது மனம் முழுமையாகத் திருப்தி அடையவில்லை. இறுதியில், எல்லா யுகங்களையும் கடந்த மகா ஞானியான காகபுஷுண்டி முனிவரையே சந்திக்க வேண்டும் என்று தீர்மானித்தான்.

காக வடிவில் வாழ்ந்த காகபுஷுண்டி சாதாரண முனிவர் அல்லர். எண்ணற்ற கல்பங்களையும், பல பிரளயங் களையும், மீண்டும் மீண்டும் நிகழ்ந்த பல ராமாவதாரங்களையும் நேரில் கண்ட அரிய ஞானி.

காலத்தின் மாற்றங்களால் பாதிக்கப்படாத மனநிலையையும், பரம்பொருளின் உண்மையை நேரடியாக உணர்ந்த அனுபவத்தையும் பெற்றிருந்தார். அவருடைய ஆசிரமத்தை அடைந்த கருடன் மிகுந்த பணிவுடன் வணங்கி தனது சந்தேகங்களை முன்வைத்தான்.

aanmeegamalar.com

“முனிவரே, இந்த உலகில் பிறந்தவர்கள் அனைவரும் இறக்கிறார்கள். ஆனால் மரணம் ஏன்



மனிதர்களுக்கு இவ்வளவு பயத்தை உண்டாக்கு கிறது? மரணத்தை வெல்ல முடியுமா? தர்மமாக வாழ்பவர்களுக்கும் ஏன் துன்பம் வருகிறது? இறைவனை வழிபடுபவர்களுக்குக் கூட ஏன் சோதனைகள் ஏற்படுகின்றன?” என்று கேட்டான்.

கருடனின் கேள்விகளைக் கேட்ட காகபுஷுண்டி புன்னகையுடன் அவனை நோக்கி,

“கருடா, நீ கேட்பது உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனின் மனதிலும் எழும் கேள்விதான். ஆனால் இதற்கான விடையை உணர்ந்தவர்கள் மிகவும் சிலரே,” என்று கூறினார்.

பிறகு அவர் மெதுவாக விளக்கத் தொடங்கினார். “மரணத்தை யாராலும் வெல்ல முடியாது. ஏனெனில் பிறந்த ஒவ்வொரு உடலுக்கும் ஒரு முடிவு உண்டு. ஆனால் மரண பயத்தை வெல்ல முடியும். உடல் என்பது ஐம்பூதங்களால் உருவான ஒரு கருவி மட்டுமே. அது காலம் வந்தவுடன் இயற்கையோடு கலந்துவிடும். ஆனால் ஆத்மா பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை. அது நித்தியமானது.

இதை உணர்ந்தவனுக்கு மரணம் ஒரு முடிவாகத் தோன்றாது; புதிய பயணத்தின் தொடக்கமாகவே தெரியும்.” கருடன் அமைதியாக கேட்டுக் கொண் டிருந்தான்.

காகபுஷுண்டி மேலும் கூறினார்:

“மனிதன் அனுபவிக்கும் இன்பமும் துன்பமும் இறை வன் விருப்பப்படி மட்டும் வருவதில்லை. அவன் செய்த கர்மாவின் விளைவாகவே வருகின்றன. நல்ல செயல் கள் புண்ணியத்தைத் தரு கின்றன. தீய செயல்கள் பாவத்தைத் தருகின்றன. இந்த இரண்டிற்கும் ஏற்ப வாழ்க்கை நகர்கிறது. தர்ம மாக வாழ்பவர்களுக்குக் கூட துன்பம் வரலாம்.

ஆனால் அந்தத் துன்பம் அவர்களை உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்லும். அதர்மமாக வாழ்பவர்களுக்கு வரும் சுகம் நிரந்தரமல்ல. அவர்களுடைய கர்ம பலன் முடிந்தவுடன் அதன் விளைவுகளை அவர்கள் அனுபவிக்க வேண்டியதுதான்.”



“எமதருமன் குறித்து மனிதர்கள் தவறாக நினைக்கிறார்கள். அவர் கொடியவர் அல்ல. உயிர்களைப் பறிப்பதற்காக மட்டும் இருப்ப வரும் அல்ல. அவர் பரம நீதிபதி. ஒவ்வொரு உயிரும் செய்த கர்மாவுக்கு ஏற்ற பலனை வழங்குபவர். தர்மம் தவறாமல் வாழ்ந்தவர்களுக்கு எமனிடம் பயப்பட வேண்டிய காரணமே இல்லை. அவர்களை அவர் கருணையுடனும் நீதியுடனும் வழிநடத்துவார்.”

“மனிதனை நரகத்திற்கு அழைத்துச் செல்வது எமன் அல்ல. அவனுடைய பேராசை, அகந்தை, பொய், அநீதி, கோபம், பொறாமை போன்ற குணங்கள்தான். அதேபோல் மனிதனை உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்வது அவனுடைய சத்தியம், தர்மம், கருணை, பக்தி மற்றும் தன்னலமற்ற வாழ்க்கை. இறைவனிடம் முழுமையாக சரணடைந்து வாழ்பவனுக்கு மரணமும் ஒரு பயங்கரமான நிகழ்வு அல்ல. aanmeegamalar.com

அது அவனை இறைவனின் திருவடிகளுக்குக் கொண்டு செல்லும் புனிதமான வாயில். உடல் அழிந்தாலும் ஆத்மா தனது பயணத்தைத் தொடர் கிறது. ஆத்மாவின் உண்மையை அறிந்தவன் வாழ்விலும் மரணத்திலும் சமநிலையோடு இருப் பான்.” aanmeegamalar.com

இந்த உபதேசங்களைக் கேட்ட கருடனின் மனம் தெளிந்தது. இதுவரை அவனைப் பயமுறுத்திய மரணத்தின் ரகசியம் அவனுக்குப் புரிந்தது. வாழ்க்கையின் பெருமை நீண்ட நாட்கள் வாழ்வதில் இல்லை; ஒவ்வொரு நாளும் தர்மத்துடனும் உண்மையுடனும் இறைநம்பிக்கையுடனும் வாழ்வதில்தான் இருக்கிறது என்பதை உணர்ந்தான்.

காகபுஷுண்டியை வணங்கி, “இன்று என் அறியாமை நீங்கியது. மரணத்தை வெல்ல முயற்சிப்பதைவிட, மரண பயத்தை வென்று தர்மமாக வாழ்வதே மனித வாழ்க்கையின் உயர்ந்த நோக்கம் என்பதை அறிந்தேன்,” என்று கூறினான்.

காகபுஷுண்டி கருடனை ஆசீர்வதித்து, “உலகில் வாழும் அனைவரிடமும் இந்த ஞானத்தைப் பகிர்ந்து கொள். மரணத்தை நினைத்து அஞ்சுபவர்களுக்கு ஆத்மாவின் உண்மையை எடுத்துரைத்து, தர்மத்தின் வழியில் வாழ்வதே நித்திய ஆனந்தத்திற்கு வழி என்பதை உணர்த்துவாயாக,” என்றார்.

அன்றிலிருந்து கருடன் மரணத்தைப் பற்றிய அச்சத்தை முற்றிலும் விட்டு விட்டு, பிறப்பு-இறப்பின் சுழற்சியைத் தாண்டும் ஞானமே மனித வாழ்க்கை யின் மிகப் பெரிய செல்வம் என்பதை உலகிற்கு எடுத்துரைக்கத் தொடங் கினான். aanmeegamalar.com

e-magazine
aanmeegamalar.com

உங்கள் **பகுதியில்**
உள்ள கோவில்
கும்பாபிஷேகம்,
சிறப்பு விழாக்கள்,
போன்றவற்றை

# tabloid
# வடிவில்

4, 8, 12, 16 பக்கங்களில்

இதுபோன்ற
**சிறப்பு மலராக**
வெளியிட தொடர்பு
கொள்ளவும்

தரமாகவும்,
சிறப்பாகவும் செய்து
தருகிறோம்...!




தொடர்புக்கு கொள்ளவும்
**அழகுராஜா**
முதன்மை செய்தியாளர்
9994323622
9444228203

தங்கள் கோவில்களின் ஆன்மிக நிகழ்வுகளை
ஆயிரக்கணக்கான பக்தர்களிடம் கொண்டு சேர்ப்போம்!

# உருவ வழிபாட்டில் தொன்மையானது
# முருகன் வழிபாடாகும்

மனித இனம் முதன் முதலில் தோன்றிய இடம் குறிஞ்சி நிலமாகும். ஆகவே முதன் முதலில் மக்கள் குறிஞ்சி நிலத்திலேயே தெய்வ வழிபாடு தொடங்கினார்கள். ஒரு குழந்தை வடிவம் படைத்து அதை கடவுளாக வழிபாடு செய்தது முருகன் வழிபாடு என சொல்கிறார்கள்.

உருவ வழிபாட்டில் தொன்மையானதும் முருகன் வழிபாடாகும். முருகன் குறிஞ்சி நிலக்கடவுள், மலையும் மலை சார்ந்த இடங்களின் கடவுள் முருகன். அதனால் முருகனைக் 'குறிஞ்சிக் கிழவன்' 'மலைகிழவோன்' என்று தமிழ் நூல்கள் கூறுகின்றன.

முருகனே தமிழ் மொழியை முதன் முதலில் அகத்தியருக்கு அறிவுறுத்தினான் என்பது வரலாறு. மேலும் சிவ பிரானுக்குப் பிரணவப் பொரு ளைத் தமிழிலேயே முருகன் உபதேசித்தான். aanmeegamalar.com

'முருகு' என்ற சொல்லுக்கு அழியாத அழகும், குன்றாத இளமையும், இயற்கை மணமும், எல்லாப் பொருள்களிலும் கடவுள் தன்மை உண்டு என பல பொருள்கள் உண்டு.

'மு' என்பது திருமாலையும் 'ரு' என்பது சிவபெருமானின் அம்சத்தையும் 'க' என்பது பிரம்மனையும் குறிக்கும் என்பர். தமிழின் மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் தன்னுடைய கண்களாகவும், தமிழில் வல்லினம், மெல்லினம், இடையினம் விளங்கும் எழுத்துக்கள் ஆறும் முகங்களாகவும்,

தனி நிலை எனப்படும் ஆய்தமே ஒப்புயர்வற்றுத் திக ழும் வேலாகவும் கொண்டு, தமிழ்த் தெய்வமாகிய முருகன் தமிழ் வடிவாக விளங்குகின்றான்.

ஞானமே உடலாகவும், இச்சாசக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி என்னும் முச்சக்திகளே மூன்று கண்களாகவும், இப்பெரிய உலகமே கோயிலாகவும் கொண்டு நிற்கும் ஒப்பற்ற தனிச்சுடராகத் திகழ் பவன் முருகன்.

சுருக்கமாக சொல்ல வேண்டுமானால் நூறாயிரம் சூரியன்கள் ஒரே காலத்தில் ஒளி வீசுவது போன்ற பேபரழகு வாய்ந்த தெய்வீக வடிவம் கொண்டவன் முருகன். aanmeegamalar.com

முருகனை வணங்கினால் எல்லாக்கடவுள்களை யும் வணங்கி அடையும் பயன்களை எல்லாம் நாம் ஒருங்கே பெறலாம்.




மகனுக்குச் செய்யும் சிறப்பால், தந்தை தாயாகிய சிவபெருமானும் உமாதேவியும், தம்பியைப் போற்றுதலால் சகோதரனா கிய விநாயகரும், மருமகனை வழிபடுத லால் மாமனாகிய திருமா லும், தலைவனை வணங் குதலால் தேவரும், முனிவரும் ஆகிய அனைவரும் மகிழ்ச்சி அடைவார்கள். எனவே முருகன் வழிபாடு மிக்க சிறப்புடையது.

முருகன் தன் பக்தர்கள் வேண்டும் கோரிக்கைகளை எல்லாம், அவர்கள் வேண்டியவாறே விரும்பிக் கொடுத்து அருளும் தன்மை வாய்ந்தவன். முருகனை அடைந்தால் அவன் நம் துன்பத்தை அழிப்பான்.

முருகனை அன்புடன்வழி பட்டு முருகா முருகாஎன எப்போதும் கூறித் தியானிப் பவர்கள் என்றும் குறையாத பெரும் செல்வத்தைப் பெறு வார்கள். அவர்களைஒரு போதும் எத்தகைய துன்ப மும் அணுகாது.

# பைரவரை வணங்கும் முறை

aanmeegamalar.com

◆ **நவகிரக தோஷங்கள் நீங்க** சதுர்கால பைரவருக்கு செவ்வரளி பூவால் 9 வாரங்கள் சகஸ்ரநாம அர்ச்சனை செய்ய வேண்டும்.

◆ **வறுமை நீங்க** தேய்பிறை அஷ்டமிகளில் மாலை நேரத்தில் வில்வம் மற்றும் வாசனை மலர்களால் அஷ்டோத்திரம், சகஸ்ரநாமம் அர்ச்சனை செய்து 11 பைரவ தீபங்கள் ஏற்ற வேண்டும்.

◆ **இழந்த செல்வத்தை திரும்பப்பெற** 11 அஷ்டமிகள் பைரவ தீபங்கள் ஏற்ற வேண்டும். பைரவ தீபம் என்பது மிளகைச் சிறு மூட்டையாகக்கட்டி நெய் அல்லது நல்லெண்ணெய் இட்டு தீபம் ஏற்றுவதாகும்.

aanmeegamalar.com
aanmeegamalar.com

◆ **சனி தோஷம் நீங்க** பைரவருக்கு 9 சனிக்கிழமைகள் சிவப்பு நிறப் பூக்களால் அர்ச்சனை செய்து 4 பைரவ தீபங்கள் ஏற்ற வேண்டும்.

◆ **திருமணத்தடை நீங்க** ஞாயிற்றுக்கிழமை ராகு காலத்தில் திருநீறு அபிஷேகம் செய்து மிளகு வடைமாலை சார்த்தி அர்ச்சனை செய்ய வேண்டும்.

◆ **வீட்டில் செல்வம் செழிக்க** தேய்பிறை அஷ்டமிகளில் சதுர்கால பைரவருக்கு சொர்ண புஷ்பம் அல்லது 108 காசுகளால் அர்ச்சிக்க வேண்டும். அந்த காசுகளை வீட்டில் பணப் பெட்டியில் வைக்கச் செல்வம் செழிக்கும்.

aanmeegamalar.com



ஸ்ரீ பைரவரை வணங்குவதால் வறுமை, பகைவர்களின் தொல்லை, வியாபார முன்னேற்றம், தனலாபம், அஷ்ட ஐஸ்வர்யங்களும் கிடைக்கும்.

aanmeegamalar.com

பைரவருக்கு மிளகு கலந்த அன்னம் மற்றும் வடை நைவேத்தியமாக படைக்கலாம்.

அனுமனுக்கு வடைமாலை சார்த்துவது போல், பைரவருக்கும் வடைமாலை சார்த்தி வழிபடுவது கூடுதல் பலன்களைத் தரும்.

# இறை சக்தியின் வடிவமே

# ஸ்ரீ சக்கரம்

ஸ்ரீ சக்கரம் என்பது இறைவனின் சக்தியின் வடிவமாகக் கருதப்படுகிறது. எனவே, அதை முறைப்படி ஒரு குருவிடம் உபதேசம் பெற்று அல்லது தகுந்த வழிகாட்டுதலுடன் வீட்டில் வைப்பது சிறப்பு. aanmeegamalar.com

## தூய்மை

ஸ்ரீ சக்கரத்தை வைக்கும் இடம் மிகவும் தூய்மையாகவும், அமைதியாகவும் இருக்க வேண்டும். அந்தப் பகுதியைச் சுத்தமாகப் பராமரிப்பது மிக அவசியம்.

## நித்திய பூஜை

ஸ்ரீ சக்கரத்தை வீட்டில் வைத்துவிட்டால், அதற்குத் தவறாமல் தினசரி பூஜைகள் மற்றும் தீபாராதனை செய்வது அவசியம்.


ஒருமுறை பூஜையைத் தொடங்கி விட்டால் அதைத் தொடர்ச்சியாகச் செய்ய வேண்டும்.

## மன உறுதி

ஸ்ரீ சக்கர வழிபாடு மன அமைதி, குடும்ப நலம் மற்றும் நேர்மறை ஆற்றலைப் பெருக்க உதவும் என்று ஆன்மீக சாஸ்திரங்கள் கூறுகின்றன.

## அறிவுரை

ஸ்ரீ சக்கரம் மிக வும் சக்தி வாய்ந்தது என்பதால்,அதை வீட்டிற்கு வாங்கி வரும்போது தகுந்த சாஸ்திரப் புத்தகங்களின் படியோ அல்லது அனுபவம் வாய்ந்த பெரியவர்களின் ஆலோசனைப் படியோ செய்வது உசிதமானது



## சரியான வடிவம்

ஸ்ரீ சக்கரம் பல வடிவங்களில் கிடைக்கிறது (தங்கம், வெள்ளி, செம்பு, அல்லது பஞ்சலோகம்). இதில் மெரு (Meru) சக்கரம் அல்லது தட்டையான (Flat) ஸ்ரீ சக்கரம் எது உங்களுக்குப் பொருத்தமானது என்பதை உங்கள் குல வழக்கம் அல்லது அனுபவம் வாய்ந்த குருவிடம் கேட்டு அறிவது நல்லது. aanmeegamalar.com

## பிரதிஷ்டை

ஸ்ரீ சக்கரத்தை வெறுமனே ஒரு படமாகவோ அல்லது பொருளாகவோ கருதாமல், முறைப்படி ஒரு குரு அல்லது சிவாச்சாரியார் மூலம் "பிராணப் பிரதிஷ்டை" செய்து வீட்டிற்கு எடுத்து வருவது அதன் சக்தியை முழுமையாகப் பெற உதவும். aanmeegamalar.com

## பூஜை முறைகள்

ஸ்ரீ சக்கரத்திற்கு லலிதா சகஸ்ரநாமம், ஸ்ரீ சூக்தம், அல்லது லலிதா திரிசதி போன்ற மந்திரங்களைச் சொல்லி அர்ச்சனை செய்வது மிகச் சிறப்பான பலன்களைத் தரும்.

## நேர்மறை ஆற்றல்

ஸ்ரீ சக்கரம் இருக்கும் இடத்தில் வாஸ்து தோஷங்கள் விலகி, நேர்மறை அதிர்வுகள் அதிகரிக்கும். குடும்பத்தில் மன அமைதி, பொருளாதார ரீதியான முன்னேற்ற

# ஆகம வழிபாடு, பூஜாவிதி இல்லை எளிய மக்களின் வழிபாட்டை ஏற்கும்

# மாரியம்மன் வழிபாடு



மாரியம்மன் என்பவள் பாமரர்கள் வழிபடும் ஒரு கிராம தேவதை; அவளது வழிபாடு நாட் டுப்புற மக்களால் அவரவர் மரபையொட்டி இயற்றப்படுவதேயன்றி அவளுக்கு ஆகம வழிபாடோ, பூஜாவிதியோ கிடையாது; என்ற கருத்து உள்ளது. aanmeegamalar.com

ஆனால் உண்மையில் மாரியம்மன் இரண்டுவித வழிபாட்டையும் ஏற்பவள், ஒன்று ஆகம வழிபாடு தெரியாதவர்கள் செய்யும் கிராமத்து வழிபாட்டுமுறையையும், ஆகம, வேத சாஸ்திரம் தெரிந்தவர்கள் செய்யும் ஆகம வழிபாட்டையும் ஏற்றுக் கொள்ளும் ஒரே தெய்வம் மாரியம்மன் மட்டுமே.

மாரியம்மனைப்பற்றி ஆகமங்களில், குறிப்பாக உத்தர காரணாகமத்தின் 95 வது படலமான மஹாமாரி ஸ்தாபனா விதி படலம் மாரியம்மனைப் பிரதிஷ்டை செய்யும் முறையையும், பூஜிக்கும் முறையையும், அவளின் ஆலயங்களில் உத்ஸவம் நிகழ்த்தும் முறையையும் விவரிக்கின்றது. aanmeegamalar.com

## “மஹாமாரி” என்றப் பெயர் எப்படி ஏற்பட்டது?

ஸ்போடகாதி ப்ரஸமநம் ஸர்வலோகபயங்கரம் ||
மாராஸுரேந பலினா பீடிதே ச ஜகத்த்ரயே |
மாராஸுர வதம் பூர்வம் மஹாமாரீதி நாமத: ||

மூவுலகங்களையும் அம்மைநோயின் மூலம் பீடித்திருந்த மாராஸுரன் என்பவனை வதம் செய்ததால் அவளுக்கு “மஹாமாரி” என்றத் திருநாமம் உண்டாயிற்று.

த்ரிநேத்ரா சதுர்புஜா ஸாந்தா கராலவதநாந்விதா |
ஜ்வாலோர்த்வகேசிநீ ரக்தா கபாலம் கட்க பாஸிநீ||
டமருந்தார்யதே சைவ பத்ம பீடோபரிஸ்திதா |
ஸயநம் வாமபாதந்து லம்பிதம் ஸவ்யபாதகம் ||
க்ருஷ்ணவஸ்த்ர ஸமாயுக்தம்
நாகயாக்ஞோபவீதீ நீம்|









தடங்கம் தக்ஷிணே கர்ணே வாமே லம்ப
ஸமந்விதாம் ||
ஸர்வாபரணபூஷ்யான் ச ப்ரபாமண்டல
மத்யகாம் |

aanmeegamalar.com

மூன்றுக் கண்களும், கபாலம், வாள், பாசம் மற்றும் உடுக்கையேந்திய நான்கு கரங்களும், கோரைப் பற்களையுடைய சாந்தமான முகத்தோற்றமும், மேல்நோக்கிய ஜ்வாலகேசமும் கொண்டு விளங்குபவளும்; பத்மபீடத்தின் மீது இடதுக் காலை மடக்கி வலதுக் காலை கீழிருத்தி அமர்ந்திருப்பவளும்; கருத்தவஸ்த்ரத்தை அணிந்து சர்பத்தை யாக்ஞோபவீதமாகக் கொண்டவளும்; தாடங்கம் அணிந்த வலதுக் கர்ணமும், தொங்குகின்ற இடதுக் கர்ணமும் கொண்டுத் திகள்பவளும், அனைத்து ஆபரணங்களையும் அணிந்து ப்ரபாமண்டலத்தின் மத்தியில் வீற்றிருப்பவளே மஹாமாரி.

aanmeegamalar.com

மஹாமாரி ப்ரதிஷ்டைக்குப் பதினாறு தூண்களையுடைய மண்டபத்தை நிர்மாணித்து மத்தியில் வேதியை நிறுவவேண்டும்:

பூர்வோக்த விதினா சைவ ஷோடச ஸ்தம்ப
ஸம்யுதம் |
மத்யே வேதிம் ப்ரகல்ப்யாத தர்பனோத்தர
ஸந்நிபம் ||

வேதியின் மத்தியில் கரகத்தை ஸ்தாபித்து மாரியை அதில் ஆவாஹனம் செய்து கலாந்யாஸம் செய்ய வேண்டும்:

கரகம் சமலங்க்ருத்ய ஆஸனம்
பூர்வவத்யஜேத்|
மூர்த்திம் அப்யர்ச்ய ஸம்பூஜ்ய கலாந்யாஸம்
ஸமாசரேத்||

## மஹாமாரியின் மூல மந்த்ரம் :

ப்ரணவம் பூர்வம் உச்சார்யா
மாயாபீஜம் அத: பரம் ||
ஹ்ரீம்காரந்து தத:
ஹ:ஹ: ஹூம் பட் இத்யபி |
ஸ்வாஹாந்தம் உச்சரேத் பூஜ்ய
ஆவாஹ்ய கடமத்யமே ||

## மஹாமாரியின் அஷ்ட சக்திகளின் பெயர்கள்:

காளீ ச காளராத்ரீ ச
பத்ரா ச கோமளீ ததா |
யாமலீ சைவ பாசாங்கீ
சகோராக்ஷி ததைவ ச ||
ஷட்கோணவாஸிநீத்யேதே அஷ்டகும்பே
ஸுபூஜயேத் |

கடுகான்னம், மிளகு சாதம், மஞ்சட்பொடி கலந்த அன்னம், உளுந்தன்னம், பாயசம், வடை முதலியவற்றைக் கொண்டு ஹோமம் செய்ய வேண்டும். தாம்ரபாத்ரத்தில் உள்ள பாலால் ஹோமம் செய்வது விசேஷம் என்ற குறிப்புள்ளது:

ஸர்ஸபான்னம் மரிச்யான்னம்
ஹரித்ராந்நம் ஹுநேத் ததா |
மாஷான்னம் பாயசம் சைவ மாஷாபூபம்
ஹுநேத் ததா ||
தாம்ரபாத்ரே க்ஷிபேத்கவ்யம் ஹோம
யித்வா விசேஷதா: |

எருமைநெய்யைக் கொண்டு மாவிளக்குப் போடுவது விசேஷம் என்றுள்ளது

# பார்வதிதேவியை வளர்த்த

# எமதர்மராஜாவுக்கு தனிக் கோவில்

ஒரு சமயம் பார்வதிதேவி பிரகதாம்பாள் என்ற திருநாமத்துடன் சிறு குழந்தையாக அவதரித்தார். சிவபெருமான் பிரகதாம்பாளை எமதர்ம ராஜாவிடம், ஒப்படைத்து பூலோகத்துக்குக் கூட்டிச் செல்லுமாறும், அந்தப் பெண் குழந்தை பெரிய பெண் ஆன பின்னர் தனக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என கட்டளையிட்டார்.

திருச்சிற்றம்பலத்தில் வளர்ந்த பிரகதாம்பாள் திருமண பருவத்தை அடைந்ததும், தேவர்கள் அனைவரும் ஒன்றுகூடி, பிரகதாம்பாளை சிவபெருமானுக்குத் திருமணம் செய்து வைக்க முடிவு செய்கின்றனர்.

அந்நேரம், சிவபெருமான் நிஷ்டையில் இருக்கவே, மன்மதனை வைத்து சிவ பெருமானின் நிஷ்டையைக் கலைக்க முடிவு செய்கின்றனர். அதன்படி திருச்சிற்றம்பலத்திலிருந்து மிக அருகில் உள்ள மன்மதனின் ஊரான மதமட்டூரிலிருந்து சிவ பெருமானின் மீது பூங்கணை தொடுக்கிறார் மன்மதன். aanmeegamalar.com

கடும் கோபத்துடன் கண் விழித்த சிவ பெருமான் தன் நெற்றிக்கண் பார்வையால் மன்மதனை அழித்தார். பின்னர், மன்மதனின் மனைவி ரதிதேவி மன்மதனை, உயிர்ப்பிக்கும்படி சிவபெருமானிடம் வேண்டினார்.

ஆனால் சிவபெருமான், மாண்டவர்களை மீண்டும் உயிர்ப்பிக்க முடியாது என்றும், வேண்டு மானால் ஆண்டுதோறும் மாசி மாதத்தில் மன்மத னுக்குத் திருவிழா நடைபெறும்போது மட்டும் ரதியின் கண்ணுக்குத் தெரியும்படி செய்வதாகவும் கூறி அருளினார். aanmeegamalar.com

இவ்வாறு சிவனின் கோபத்தின் மூலம் உரு வான திருச்சிற்றம்பலம் எமதர்மராஜா கோவில். தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை – புதுக் கோட்டை செல்லும் சாலையில் பட்டுக்கோட்





டையிலிருந்து சுமார் 16 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. aanmeegamalar.com

இதுவரை, சில கோயில்களில் எமதர்மனுக் கென்று தனிச் சந்நிதிகள் மட்டுமே இருந்தது. ஆனால் இக்கோவில், எமனுக்கென்று தனிக் கோவிலாக இருப்பது தனிச்சிறப்பாகும்.

இக்கோவிலில் எமதர்ம ராஜா ஆறடி உயர எருமை வாகனத்தின் மீது, முறுக்கிய மீசையுடன், பாசக்கயிறு, ஓலைச்சுவடி மற்றும் கதையுடன் கம்பீரமாகக் காட்சி தருகிறார்.

இரண்டாயிரம் வருடங்களுக்கும் மேலாக இந்தப் பகுதி மக்களுக்கு இவர்தான் இஷ்ட தெய் வம். சாதாரண மண் கோயிலாக இருந்த இந்தக் கோயில், சில ஆண்டுகளுக்கு முன் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது.

எமதர்ம ராஜாவை சனிக்கிழமைகளில் எம கண்ட நேரத்தில் வழிபடுவது மிகவும் சிறப்பானப் பலன்களைத் தரும். ஒவ்வொரு நாளும்எமகண்ட நேரத்தில் எமதர்மனுக்கு பூஜைகள் நடக்கும். திருமணம், வளைகாப்பு போன்ற மங்கல நிகழ்வு களின் பத்திரிகைகளை எமதர்ம ராஜாவின் காலடியில் வைத்து வழிபடுவது வழக்கம்.

பணத்தை வாங்கிக் கொண்டு யாரேனும் ஏமாற்றியிருந்தால் அவர்களின் பெயரை ஒரு பேப் பரில் எழுதி அதை பூஜித்து சூலத்தில் கட்டி விடும் வழக்கம் உண்டு. இதற்கு 'படி கட்டுதல்' என்று பெயர். படி கட்டிய சில நாள்களிலேயே கொடுத்த பணம் பலருக்குத் திரும்பக் கிடைத்துள்ளது. எமபயத்தைப் போக்கிக் கொள்ளவும், ஆயுளை நீட்டித்துக் கொள்ளவும், திருமணத் தடை நீங்கவும் இங்கே வழிபடுகிறார்கள்.

எமதர்மனை இங்கு வழிபடும் பக்தர்கள், நேருக்கு நேராக நின்று வணங்குவதில்லை என்கிறார்கள். இவரை வணங்கினால், நமக்கான நீதி உடனடியாக கிடைக்கும் என்றும் பக்தர்கள் நம்புகிறார்கள். aanmeegamalar.com

இந்தப் பகுதியில் நடைபெறும் எந்த மங்கல நிகழ்வாக இருந்தாலும், அதற்கான பத்திரிகையை, எமதர்மனின் காலடியில் சமர்ப்பித்து வழிபட்டு வாங்கிச் செல்கின்றனர்.

நீண்ட ஆயுள் கிடைக்க, மரண பயம் நீங்க, திருமணத் தடை அகல என்று இங்கே வந்து வழிபடுபவர்களின் எண்ணிக்கை ஏராளமாம்.

இந்த ஆலயத்தில் ஆண்டுதோறும் ஆடி மாதத்தில் திருவிழா நடத்தப்படுகிறது.

எமதர்மராஜாவை சனிக்கிழமைகளில் எமகண்ட நேரத்தில் வழிபாடு செய்வது சிறப்பான பலனைத் தரும் என்கிறார்கள்.

# தாந்திரீக சக்திவாய்ந்த தேவி பைரவி

அவள் முதுகெலும்பின் அடிப்பகுதியில் அமைந்துள்ள ஒரு தெய்வீக சக்தி வடிவமான குண்டலினியின் தேவி ஆவாள். இதனால்தான், தேவி பைரவியை வழிபடும்போது பெரும்பாலும் தியானம் செய்வதும் அடங்கும், இது குண்டலினியை எழுப்ப உதவும். அழிவின் தேவியான காளி, சிவபெருமானின் உக்கிரமான வடிவமான கால பைரவரின் துணைவியாவார். aanmeegamalar.com

அதனால் இவர் காலபைரவி என்றும் அழைக்கப்படுகிறார். காளி தேவி, சக்தியின் மிகவும் ஆதி வடிவமாக (ஆதி சக்தி) அறியப்படுகிறார்.



மகாவித்யாக்களில் ஐந்தாமவரான தேவி பைரவி, படைப்பு, காத்தல் மற்றும் அழித்தல் ஆகியவற்றின் தேவி ஆவார். பைரவி என்ற பெயருக்கு 'அச்சமூட்டும்', 'கொடிய', 'பயங்கரமான' அல்லது 'அஞ்சத்தக்க' என்று பொருள். தேவி பைரவி உக்கிரமான தேவி ஆவார், அவருடைய பெயர் மூன்று உலகங்களிலும் அச்சத்தை ஏற்படுத்துகிறது.

பைரவி படைப்பிற்கும் அழிவிற்கும் காரண மானவள். அவள் திரிபுர பைரவி என்றும் அழைக்கப்படுகிறாள், இவள் மூன்று லோகங்கள் அல்லது மூன்று உலகங்களுடன் தொடர்புடையவள்.

அவள் அக்னி (நெருப்பு), வித்யுத் (மின்னல்) மற்றும் சூர்யன் (சூரியன்) ஆகியவற்றின் அம்சங்களைக் கொண்டவள்; இந்திரன், சூரியன் போன்ற தெய்வங்களை உள்ளடக்கியவள்.

அவர் தச மகா வித்யா எனப்படும் பத்துவெவ்வேறு வடிவங்களில் வழிபடப்படுகிறார், அவற்றில் ஐந்தாவது வடிவம் பைரவி ஆகும். இந்த காரணத்தினால்தான் அவர் காளிதேவியுடன் பல குணாதிசயங்களைப் பகிர்ந்து கொள்கிறார்.

பைரவி தேவி பெரும்பாலும் சுடுகாட்டில் பல்வேறு வகையான சாதனைகளைச் செய்வதாகச் சித்தரிக்கப்படுகிறார். மற்ற தேவியர்களைப் போலல்லாமல், அவரது கூந்தல் நேர்த்தியாகக் கட்டப்படாமல், தலை முழுவதும் பரவிக்கிடக்கிறது. காளி தேவியைப் போலவே, அவரும் மண்டை ஓடுகளால் ஆன மாலையுடன் சிவப்பு நிற ஆடைகளை அணிந்திருக்கிறார்.



அவளுடைய ஒரு கை, நமக்கு வரம் அளித்து, அச்சமின்றி இருக்குமாறு அறிவுறுத்துவது போல் காட்டப்பட்டுள்ளது. ஒரு கையில் அவள் ஒரு வாளையும், மறு கையில் உடலற்ற தலையையும் ஏந்தியிருக்கிறாள். அவளுக்கு அடர் சாம்பல் கலந்த சிவப்பு நிறத் தோலும், உடல் முழுவதும் இரத்தக் கறையும் உள்ளது. அவள் திரிசூலம் மற்றும் வஜ்ராயுதம் போன்ற ஆயுதங்களை ஏந்தியிருப்பது போல் காட்டப்பட்டுள்ளது.



பைரவி தேவி பெரும்பாலும் சவாசதானம் எனப்படும் தலையற்ற உடலில் அமர்ந்த கோலத்தில் சித்தரிக்கப்படுகிறார்; இது ஒரு வகையான தியானமும் ஆகும்.

அவரது இரு கைகளும் அபய மற்றும் வரத முத்திரைகளில் உள்ளன. அவரது வாகனம் சிங்கம், இது போர்க்களத்தில் அவரது சக்தியைக் காட்டுகிறது. அவர் பரவசமான அல்லது கோரைப் பற்களுடன் கூடிய உக்கிரமான மனநிலையில் சித்தரிக்கப்படுகிறார்.


அவள் பாதாள லோகத்தில் (கீழ் உலகம்) வசிக்கிறாள். அவள் ஒரு மர்மமான தேவி, மிகவும் அமைதியாகவும் அடக்கமாகவும் இருப்பாள்; தலை துண்டிக்கப்பட்ட ஒரு சடலத்தின் மீது அவள் தியானம் செய்பவள், மற்ற வடிவங்களில், அவள் புலித்தோல் மற்றும் ஒரு எலும்புக்கூட்டால் மூடப்பட்ட, இரத்தம் குடிக்கும் தேவியாகக் காட்டப்படுகிறாள்.

அவளுடைய கோபத்திற்கு ஆளாக யாரும் விரும்ப மாட்டார்கள். அவளது தோற்றம் அசுரர்களை மண்டியிடச் செய்யும். இன்றைய உலகிலும் பைரவியின் இருப்பு ஒரு குறியீடாக விளங்குகிறது. நமது அழிவுகரமான பழக்கங்கள், காமம், சுயநலம் ஆகிய அனைத்திலும் அவள் இருப்பதாகக் கூறப்படுகிறது; அவற்றை எதிர்த்துப் போராட அவள் நமக்கு உதவுகிறாள். அவள் பிரக்ஞையின் சக்தியை யும் குறிக்கிறாள்.

aanmeegamalar.com

அவள் பேரண்டப் பேரறிவின் ஓர் வடிவம் மற்றும் தசா மகாவித்யாவில் மிகவும் சக்திவாய்ந்த தாந்திரீக தேவிகளில் ஒருவராகக் கருதப்படுகிறாள். அவள் தன் பிள்ளைகளைப் பாதுகாக்க எதையும் செய்யத் துணியும் ஓர் தாய்.

தந்திர வித்யாவில், அவள் சக்தியின் மூல வடிவம். பைரவி கிரியா போன்ற பல தாந்திரீக கிரியாக்களுடன் அவள் தொடர்புடையவள். இந்தக் கிரியாக்களைச் செய்பவர்கள் ஒளி, நெருப்பு, பூமி ஆகிய அனைத்து வகையான ஆற்றல்களையும் ஒன்றாகக் குவிக்கிறார்கள். மறுபிறவி மற்றும் ஒருவன் மூன்று வெவ்வேறு உலகங்களுக்குள் செல்வதையும் அவள் கட்டுப்படுத்துகிறாள்.




e-magazine
aanmeegamalar.com

## கேட்டதை கேட்டவாறு தரும்

# சிதம்பர சக்கர மகிமை

சித்தம் ஆகாசத்தொடு இணையும் போது அதுவே சிதம்பரம்.

இங்கே கொடுக்கப்பட்ட 'சிதம்பர' சக்கரத்தில் பஞ்சாட்சரம் மந்திரம் உண்டு. வாலையைஉணர்ந்தால் அதுவே சச்சி தானந்தம். (சத்+சித்து+ஆனந்தம்) aanmeegamalar.com

"ஐம்பதொரட்சரந்தான் ஆச்சு,
நெஞ்ஜெழுத்தாலே நினையா மலந்த
நிசந்தெரியுமொ வாலைப் பெண்ணே.
நோக்கிகோல் வாசியை மேலாக வாசி,
நிலையைப் பாரடி வாலைப் பெண்ணே.
சிதம்பர சக்கரம் தானரிந்தார்
சீமையில் உள்ள பெரியோர்கள்
சிதம்பர சக்கரமென்றால் அதற்குள்
தெய்வத்தை யல்லவோ அறிய வேணும்''

இந்த சக்கரத்தில் பஞ்சாட்சர மந்திரம் சுழற்சி முறையில் நமக்கு இடமிருந்து வலமாக, வந்து கொண்டே இருக்கும். அதாவது வாசியோகத்தில் இருக்கும் எவருக்குமே சித்திக்கும் இந்த ஜோதி யானது, சஹாஸ்ரத்தில் மேல்நோக்கியே இருக்கும். 'உன் உடலை வெறும் உப்பிட்ட பாண்டம் என்று மட்டும் எண்ணாதே, அதை பேணவேண்டும்' என்கிறார்கள் சித்தர்கள். காலங்கிநாதர், போகர், போன்ற சித்தர்கள் எல்லோருமே மேலே சொன்ன இந்த வரிகளை தங்கள் பாடல்களில் சொல்லி யுள்ளனர். aanmeegamalar.com

செப்பு தகட்டில் இந்த சக்கரத்தை செய்து வைத்துள்ளவர்கள், முறையாக அதை ஆராதிக்க வேண்டும். பாலில் சிறிது மஞ்சள் பொடியை கலந்து அதை இந்த சக்கரம் மேலே கையால் தேய்த்து பூசி, மையத்தில் குங்குமம் இட்டு வெள்ளை மலர்கள் சாற்றி, தூபம் காட்டியபின். தங்கள் தியானத்தை செய்து வரவேண்டும்.

சில வாரங்களிலோ, மாதங்களிலோ, வருடங்களிலோ அது உங்களை அறியாமல் உங்களுக்குள் ஆன்ம சிந்தனை தந்து சித்த ஆற்றலை பெருக்கும். aanmeegamalar.com

உங்கள் ஆதார சக்கரத்தின் சக்தி நிலைக்கு

ஏற்பத்தான் இந்த உயர்வு அமையும். நம் உடலில் உள்ள ஆறாதார சக்கரங்களான மூலம் முதல் ஆக்னேயம்வரை அனைத்து கதவுகளையும் திறந்துகொண்டுபோனபின் கபாலம் என்ற சிரசில் இலயிக்க ஆனந்தம் தோன்றும். சிலருக்கு சிலது இயங்கும் சில சக்ரங்கள் பழுதுபட்டிற்றுக்கும். அதில் தடையில்லாமல் ஓட்டத்தை உண்டாக்க வேண்டும் என்கிறார்கள். aanmeegamalar.com

இவ்வாரக தெய்வம் இருக்கையில், புத்தி கெட்ட மாண்பர்கள், தங்கள் ஆகாச சக்ரத்தின் கதவு திறந்து வாலை தெய்வத்தை காணமலே சாகின்றதேன் என்று கேள்வி கேட்கிறார் போகர்.

கேட்டது கிடைக்கும் சிதம்பர சக்கர வழிபாடு:

சிதம்பர சக்கரத்தை செம்பு அல்லது பஞ்சலோக தகட்டில் கீறி அதை ஆராதிக்க வேண்டும். பாலில் சிறிது மஞ்சள் பொடியை கலந்து அதை இந்த சக்கரம் மேல் பூசி மையத்தில் குங்குமம் இட்டு மல்லிகை பூ மாலை சாற்றி தூபம் காட்டி தியானிக்க வேண்டும். aanmeegamalar.com

சில வாரங்களிலோ மாதங்களிலோ உங்களை அறியாமல் ஆன்மீக சிந்தனை தந்து சித்த ஆற்றலை பெருக்கும். அதேபோல் கேட்டது எல்லாம் கிடைக்கும்.

மந்திரம்:

**ஓம் நமசிவய ஐயும் கிலியும்**
**சவ்வும் சுவாகா**

நாள் ஒன்றுக்கு 108 உருவீதம் செபிக்க சகலமும் சித்தியாகும்.

எல்லோரும் உங்களை பின் தொடர்ந்து வசிய மாகி சொல் பேச்சு கேட்பார்கள். நீங்கள் கூறுவதை தேவவாக்காக கேட்பார்கள். சகல காரியங்களும் சித்தியாகும், பலிக்கும், தொழில் வியாபாரம் விருத்தியாகும் லாபம் உண்டாகும்.

# சிவன் கோவிலில் நடைபெறும் தீமிதி திருவிழா

உலகத்தின் முதல்வன் எம்பெருமான்வீற்றிருக்கும் மலை, சித்தர்கள் வாழும்சிவன் மலை, ஜோதிமலை திருவண்ணாமலை சுமார் ஆயிரம் ஆண்டுகள் கட்டப்பட்ட பிரமாண்டமான 24 ஏக்கரில் அமைந்துள்ள ஆலய மாகும். இங்கு கார்த்திகை தீபத் திருவிழா பத்து நாட்கள் வெகு விமரிசையாக கொண்டாடப்படும். மேலும் "தீமிதி விழா" உலகத்திலேயே சிவன் ஆலயத்தில் நடைபெறுவது அண்ணாமலையார் திருக்கோயில் மட்டும்தான். aanmeegamalar.com

உலகத்திலேயே கிரிவலம் சொல்வதற்கு பிரசித்திப்பெற்ற ஆலயமாக அண்ணாமலையார் திருக் கோயில் திகழ்கிறது!!! குழந்தைஇல்லாதவர்கள் அண்ணாமலையார், உண்ணாமுலை அம்பாளை வணங்கி பயபக்தியுடன் செல்கிறார்கள்.. குழந்தை பிறந்தவுடன்அந்த குழந்தையை கரும்புத் தொட்டில் எனப்படும் தொட்டிலில் குழந்தையை வைத்து அண்ணாமலையாரை தம்பதியினர் வலம் வருகிறார்கள்.

இது வேறு எங்கும் இல்லாத இந்த ஆலயத்திற்கு உள்ள சிறப்பாகும். 350 ஜீவ சமாதி



உள்ள ஆலயம் இதுவாகத்தான் இருக்கும். 51 சக்தி பீடங்களில் ஒன்றாக திகழ்கிறது. தமது உமையாளுக்கு அண்ணாமலையார் தனது இடது பாகத்தை கொடுத்து அர்த்தநாரீஸ்வரராக திகழ்கிறார். aanmeegamalar.com

"மாலறியா நான்முகனும்" "திருமாலும்"ஈசனின் அடிமுடி திருவடி காணமுடியாமல் போனார்கள்..! பின்னர் அண்ணாமலையார் "ஜோதியாக" நின்றார்..! உலகத்திலேயே மலையே பெரியலிங்கமாக காட்சியளிப்பது இங்கு மட்டும்தான்!!!

e-magazine
aanmeegamalar.com

கட்டாய சந்தா இல்லை!

சப்ஸ்கிரைப் இல்லை!!

மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

ஆன்மிகமலர்.காம் வழங்கும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகம்
ஒரே கிளிக் 195 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# வாழ்வில் நிதானமில்லாதவர்களுக்கும் வெற்றிக்கான வழியை ஏற்படுத்தி தரும்

# ஸ்ரீ தித்திரிமுகி

தெளிவான பார்வையும், வெற்றிதரும் கூர்மையான அறிவும்! கொண்ட "ஸ்ரீ தித்திரிமுகி" வழிபாடும், தரிசனமும் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும்.

கௌதாரி முகமும் பெண் உடலும் கொண்ட "தித்திரிமுகி" 64 யோகினிகளில் ஒருவராவார். இவள், கூர்மையான பார்வையின் அதிபதி.

aanmeegamalar.com

கௌதாரி எப்படித் தரையில் ஓடும்போது கூர்ந்து கவனிக்குமோ, அதுபோல நம் வாழ்வின் சவால்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ள இவள் அருள் அவசியம்.

- **நிதானம் மற்றும் கவனிப்பு:** கௌதாரி பறவை தரையில் ஓடும்போது, சுற்றியுள்ள அனைத்தையும் கூர்ந்து கவனிக்கும். அதுபோல, தித்திரிமுகி தேவி நம் வாழ்வில் ஒரு காரியம் கைகூடும் வரை பொறுமையாக இருக்க வேண்டிய "நிதானத்தை" வழங்குகிறாள். அவசரப்பட்டு முடிவெடுப்பவர்களுக்கு இவள் ஒரு சிறந்த வழிகாட்டி.
- **மாற்றத்தின் குறியீடு:** கௌதாரி பழைய பழக்கவழக்கங்களை அழித்து, நம்மை ஆன்மீக ரீதியாகப் புதுப்பிக்க உதவுகிறாள். நம்மிடம் உள்ள தேவையற்ற பயம், சந்தேகம் மற்றும் பழைய பழக்கவழக்கங்களை அழித்து, நம்மைப் புதுப்பிக்க உதவுவாள்.





★ **விசித்திரச் சிறப்பு:** இவள் கௌதாரி முகத்தோடு, கைகளில் ஜபமாலையும், தண்டமும் ஏந்தியிருப்பாள்.

★ **சித்தர் தொடர்பு:** சித்தர்கள் இவளை "மடைப்பள்ளி யோகினி" அல்லது "ஸ்தம்பன சக்தி" என்று அழைப்பார்கள்.

★ **சுருக்கமாக:** நம் மன அலைகளை ஒரிடத்தில் நிலைநிறுத்தி ஆழமான தியானத்தில் ஆழ்த்த இவள் உதவுகிறாள்.

★ **ரகசியம்:** நம் உடலில் உள்ள 'ஆக்ஞா' (புருவ மத்தி) சக்கரத்தைத் தூண்டி, பிரபஞ்ச உண்மைகளைக் காணும் சக்தியைத் தருபவள் இவளே. aanmeegamalar.com

★ கூர்மையான கவனிப்புத் திறனும், அசையாத மன உறுதியும் கொண்ட வடிவம். வீண் விவாதங்களைத் தவிர்த்து, மௌனத்தின் மூலம் காரியத்தைச் சாதிக்கும் ரகசியத்தை இவள் அறிவாள்.

**வழிபாட்டுப் பலன்:**

★ வாழ்வில் தெளிவான இலக்குகள் மற்றும் திட்டங்களை வகுக்க உதவும்.

★ பயம், சந்தேகம் மற்றும் மன அழுத்தம் நீங்கும். aanmeegamalar.com

★ எதிரிகளின் சூழ்ச்சிகள் மற்றும் தடைகளை முன்கூட்டியே அறியும் சக்தி கிட்டும்.

★ ஒரிசாவின் "ஹிராப்பூர்" யோகினி ஆலயத்தில் இந்த அமைதி மிகுந்த தேவி யின் திருவுருவத்தைக் காணலாம்.

★ தெளிவான பார்வையும் கூர்மையான அறிவும் ஒருங்கே கொண்ட இந்த தித்திரி முகி வடிவம் மகா விசித்திரம்!

**தித்திரிமுகி மூல மந்திரம்:**

"ஓம் ஹ்ரீம் தித்திரி முகாயை நம: !!"



# ஜோதிடர்களின் கணிப்பு, வாக்கை சித்திக்க வைக்கும்

# பழனி தொட்டிச்சி அம்மன்




ஜோதிடர்களுக்கு தேவை ஞானமும் அந்தக் கல்விக்கு தேவையான ஓலைச்சுவடி குறிப்புகளும் தேவை. வலது கரத்தில் ஞானத்தின் வடிவான தாமரை மலரும் இடது கரத்தில் ஓலைச்சுவடியையும் வைத்துக் கொண்டு அருள் பாலித்து கொண்டு இருக்கும் இந்த பழனி தொட்டிச்சியம்மன் வழிபாடு செய்தாலே ஜோதிடர்கள் வாக்கு சித்தி பெறலாம்.

தொட்டிச்சி அம்மன் குறி சொல்லும் குலத்தில் பிறந்த ஒரு தெய்வமகள். பழனி அடிவாரத்தில் புலிப்பாணி சித்தர் ஜீவசமாதி அருகில் இந்த ஆலயம் உள்ளது.

காலம் கடந்து கிட்டத்தட்ட 3000 ஆண்டுகளுக்கு மேலாக புலிப்பாணி பெயரும் போகர் பெயரும் மருத்துவம் ஆன்மீகம் ஜோதிடம் என அனைத்துவிதத்திலும் இவர்கள் பெயர் காலம் கடந்து நிற்க காரணம் என்ன. எல்லை தெய்வம் என்று சொல்லக்கூடிய இந்த தொட் டிச்சி அம்மன்தான் காரணம்.

திருவாவினகுடியில் முருகன் கோபித்துக் கொண்டு வந்து கோவில் கொண்டது

e-magazine
aanmeegamalar.com

உலகம் அறிந்தது. அன்றைய காலகட்டத்தில் அறிவியல் தொழில்நுட்பம் இல்லாத காலகட்டத்தில் யார் அறிவார்கள். வீடு வீடாகச் சென்று குறி சொல்லும் வீட்டு மகளாக பிறந்து முருகனின் பெருமையை சேர்த்தவள் தான் இந்த தொட்டிச்சி அம்மன். aanmeegamalar.com

குறி சொல்லும் பெண்களின் பெரும்பாலானவர்களுக்கு குல தெய்வமாக விளங்குபவர் முருகப் பெருமான் ஆவார். இந்தத் தொட்டிச்சி அம்மன் ஆணையிட போகர் அவர்கள் பழனியில் நவபாஷாண சிலை பிரதிஷ்டை செய்தது குறிப்பிடத்தக்கது.

இன்று நாம் ஜோதிடம் சொல்கிறோம் பலன் சொல்கிறோம் நம்ம ஜோதிடத்திற்கு முன்னோடி குறி சொல்பவர்களே ஆவார்கள். அவர்களுக்கு இந்த ஞான மார்க்கத்தை வழங்கியது முருகப்பெருமான் ஆவார். முருகப்பெருமானை இன்று உலகறிய செய்தது இந்த குறி செல்லும் குல பெண்கள் ஆவார்கள். aanmeegamalar.com

அடர்ந்த வனப்பகுதியில் வேள்வி யாகம் செய்யக்கூடியவர் செவ்வாய் பகவான். செவ்வாயின் அதிதேவதை துர்க்கை பத்திரகாளி வன தேவதை என்று சொல்லலாம்.

அதில் ஒருவர் தான் இந்த தொட்டிச்சி அம்மன். ஒரு காலத்தில் அதாவது நவீன வளர்ச்சி அடையாத காலகட்டத்தில் பழனி சுற்றிய பகுதி அனைத்துமே வனப்பகுதியாகத்தான் இருந்தது. பெரும்பாலும் குறி சொல்பவர்களுக்க நிரந்தர இடம் என்பது கிடையாது.

ஆதிகாலத்தில் இருந்தே எல்லை தெய்வ மாக இருந்த இந்த தொட்டிச்சி அம்மன் ஜோதிடத்திற்கும் ஜோதிடர்களுக்கும் முன்னோடி என்று சொன்னால் அது மிகையாகாது. தொட்டிச்சி அம்மன் சாந்த சொரூபமாக நாம் பழனியில் பார்க்கிறோம். பல ஊர் இடங்களில் இது அம்மன் செவ்வாயின் தன்மை கொண்டு உக்கிரமாக இருப்பதை அறியலாம். aanmeegamalar.com

நம்ம ஒரு பெண்ணை ஊர் பெயருடன் அழைத்துச் செல்லும் பொழுது உதாரணமாக






பழங்காவேரி என்ற ஊர் இருக்கிறது என வைத்துக் கொள்ளுங்கள். அந்த ஊரில் இருக்கும் பெண்களை பழங்காரியான் என்று அழைப்பார்கள். இதே போல பல ஊர்களின் பெயர் மருவி அந்த நபர்களை அழைப்பது வழக்கம். தொட்டிச்சி என்ற பெண் தொட்டியம் மதுரை காளி அம்மன் அம்சம் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பெண்ணும் மதுரையில் இருந்து வந்திருக்க வேண்டும் என்ற எண்ணம் வருகிறது. இதன் அடிப்படையில் தொட்டியம் அம்மனை தொட்டிச்சி அம்மன் என்று அழைப்பது மரபாக இருந்திருக்கலாம். காலப்போக்கில் நாளடைவில் மருவி வருவது தானே இன்றைய நிலைமையில் உள்ளது.

நவீன காலத்தில் ஜோதிடத்தில் எவ்வளவு பெரிய ஜோதிட ஞானியாக இருந்தாலும் அக்கு வேராக ஆணிவேராக ஜாதகத்தை பிரித்து பலன் கூறினாலும் அடுத்து இன்னது தான் நடக்கப் போகிறது என்று தீர்மானித்து சொல்ல இந்த தொட்டிச்சி அம்மன் கடைக்கண் பார்வை இருந்தால் மட்டுமே சாத்தியமாகும்.

e-magazine
aanmeegamalar.com



# விருப்பம் நிறைவேற்றும்
# விகாஸ்புரி
# ஸ்ரீ தேவி மூகாம்பிகை

புது தில்லியின் விகாஸ்புரி மேற்குப் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ தேவி மூகாம்பிகை கோவில் ஆன்மீக அமைதியும் தெய்வீக அதிர்வுகளும் நிறைந்த ஒரு சிறந்த வழிபாட்டுத் தலமாகும். கர்நாடகாவின் புகழ்பெற்ற கொல்லூர் மூகாம்பிகை அம்மனின் வடிவத்தை தழுவி இந்த ஆலயம் இங்கு அமைக்கப்பட்டுள்ளது.

தில்லியில் உள்ள தமிழ் மக்கள் மற்றும் ஆன்மீக ஆர்வலர்கள் தவறாமல் தரிசிக்கும் ஒரு அமைதியான தலமாகவும் திகழ்கிறது.

இது விகாஸ்புரி (கிழக்கு) பகுதியில் குடியிருப்பு வளாகங்களுக்கு மத்தியில், தியானம் மற்றும் பண்பாட்டு மையமாகவும் செயல்பட்டு வருகிறது. இந்த ஆலயம், அமைதியான சூழலில் பக்தர்களுக்கு மன அமைதியையும், ஞானத்தையும் அருளும் இடமாக உள்ளது.

இந்த கோவிலின் மூலவரான தேவி மூகாம்பிகை, கல்விக்குரிய சரஸ்வதி, செல்வத்திற்குரிய



லட்சுமி, மற்றும் துர்க்கை (பார்வதி) ஆகிய மூவரின் ஒருங்கிணைந்த சக்தியாக

வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். இக்கோவிலில் கல்யாண கணபதி, ஆதி சங்கரர்,






வீரபத்திரர், சுப்பிரமணியர், நவக்கிரகம் மற்றும் அனுமன் சன்னதிகள் உள்ளன. இங்கு தினமும் கணபதி ஹோமம் நடத்தப்படுகிறது.

இக்கோவிலில் மாதந்தோறும் முதல் ஞாயிற்றுக் கிழமை லகுன்யாச ஏகாதச ருத்ர பாராயணம், லலிதா சகஸ்ரநாமம், மற்றும் புஷ்பாஞ்சலி போன்ற மிகச் சிறப்பான வழிபாடுகள் நடைபெறுகின்றன. மேலும், விஜயதசமி மற்றும் நவராத்திரி போன்ற நாட்களில் பக்தர்கள் திரளாகக் கூடுவர்.

கந்த சஷ்டி திருவிழாக்கள் (முருகப்பெருமான் திருக்கல்யாண உற்சவம் உட்பட) இங்கு மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. சீதா கல்யாணம் ஆண்டுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது.

aanmeegamalar.com

2026ஆம் ஆண்டு ஏப்ரல் 35 வரை 'பிரார்த்தனா' குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட முதல் 'மகா ருத்ரம்', இந்த ஆன்மீகப் பயணத்தில் ஒரு முக்கிய மைல் கல்லாக அமைந்துள்ளது.



இங்கு ஒரு வேத பாடசாலையும் செயல்பட்டு வருகிறது; இதில் சுமார் 25 மாணவர்கள் வேதம் பயின்று வருகின்றனர். வேதத்துடன் அவர்களுக்கு ஆங்கிலம் மற்றும் கணிதமும் கற்பிக்கப்படுகின்றன; மேலும், உணவு மற்றும் தங்குமிட வசதிகளும் அவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன.

தினசரி வழிபாட்டில் இந்த மந்திரத்தைக் கூறி வர, தேவியின் பரிபூரண அருளைப் பெறலாம்:

“ஓம் வாக்பின்யை ச வித்மஹே காமரூபிண்யை தீமஹி தந்நோ தேவீ ப்ரசோதயாத் !!

கோவில் நேரம் : காலை: 06:00 மணி முதல் 11:30 மணி வரை : மாலை: 5:00 மணி முதல் இரவு 8:30 மணி வரை.

aanmeegamalar.com

மெட்ரோ வசதி: மெட்ரோ புளூ லைன் பாதையில் உள்ள ஜனக்புரி மேற்கு இதற்கு அருகில் உள்ள பிரதான நிலையமாகும். அங்கிருந்து எளிதாக ஆட்டோ அல்லது ரிக்ஷா மூலம் கோவிலை அடையலாம்.

தொடர்புக்கு: திரு.பிரகாஷ்பட் 97179 88101

– டெல்லி தியாகராஜன்
9868423215

ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com

# நிருபராக விருப்பமா?

ஆன்மிகம், கோவில் வரலாறு, மகான்கள், பக்தி அனுபவங்கள், சமய நிகழ்வுகள் மற்றும் ஆன்மிகக் கட்டுரைகள் எழுதும் திறன் உள்ளவரா?

**ஆன்மிகமலர்.காம்** இணையதளத்தின் வாயிலாக வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தகம்" வெளியீட்டிற்காக

**புதிய நிருபர்கள் மற்றும் படைப்பாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.**

## அனுப்ப வேண்டியவை:

- உங்கள் கட்டுரைகள் / படைப்புகள்
- ச மீபத்திய புகைப்படம்
- முகவரி சான்று நகல்
- தொடர்பு விவரங்கள்

## படைப்புகள் வரவேற்கப்படும் துறைகள்:

- ஆன்மிகக் கட்டுரைகள்
- கோவில் சிறப்புகள்
- மகான்களின் வாழ்க்கை வரலாறு
- பக்தி அனுபவங்கள்
- சமய நிகழ்வுகள்
- கவிதைகள் மற்றும் சிறுகதைகள்

## உங்கள் படைப்புகளை அனுப்புங்கள்!

ஆன்மிக சேவையில் இணைந்து,
உங்கள் எழுத்தாற்றலை உலகறியச் செய்யுங்கள்.

## ஆன்மிகமலர்.காம்

"ஆன்மிகத்தின் ஒளியை உலசெங்கும் பரப்புவோம்"

படைப்புகளை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல்: aanmeegamalar@gmail.com

இணையதளம்: www.aanmeegamalar.com

தொடர்புக்கு: +91 9444228203

ஆன்மிகம் எழுதுவது ஒரு சேவை — அந்த சேவையில் நீங்களும் பங்கேற்கலாம்!

# ஜெகன்நாதர் ரத யாத்திரை தேரின் பெயர்களும் சிறப்புகளும்

உலகின் மிகப் பெரிய ஆன்மிக திருவிழாவாக கொண்டாடுவது புரி ஜகன்நாதர் ரதயாத்திரை, இந்த யாத்திரையில் கலந்து கொள்ள உலகெங்கிலும் உள்ள மக்கள் ஒன்று கூடுவர், பல நாடுகளில் ஜெகன்நாதர் தேரோட்டத்தைப் போன்று தேரை அலங்கரித்து தாங்கள் வசிக்கும் இடத்தில் இத்தேரோட்ட விழாவினை கொண்டாடவும் செய்கின்றனர்.

இந்த தேரோட்டத்தில் 3 வகையான தேர்கள் இடம் பெறும் ஸ்ரீ ஜெகன்நாதர், ஸ்ரீ பலபத்திரர், ஸ்ரீ சுபத்திரா ஆகியோர் தனித்தனியாக தேரில் வலம் வருவார்கள்.

aanmeegamalar.com

இந்தவகையில் ஜெகன்நாதரின் தேரோட்டம் ஜூலை 16ஆம் தேதி தொடங்கியது. பகுதா யாத் திரை என்று கூறப்படும் திரும்பி வரும் திருவிழா ஜூலை 24ஆம் தேதி நிகழ இருக்கிறது.

சோனா பேஷா எனக் கூறப்படும் தங்க ஆபரண அலங்காரம் ஜூலை 25ஆம் தேதி நிகழ இருக்கிறது. அனைவருக்கும் ஸ்ரீ ஜெகன்நாதர், ஸ்ரீ பலபத்திரர், ஸ்ரீ சுபத்திரா ஆசிகள் கிடைக் கட்டும்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த ஜெகன்நாதர் விழாவைப் பற்றி பெரும்பாலும் அறிந்திருப் போம், அந்த வகையில் முக்கியமானதாக கருதப்படும் தேரைப் பற்றிய சிறப்புகளைப் பற்றி பெரும்பாலா னோர் அறிந்திருக்க வாய்ப்பு இல்லை.

aanmeegamalar.com

நாம் தற்போது நடைபெற்று கொண்டிருக்கும் ஜகன்நாதர் தேரோட்டத்தில் பங்கு






பெரும் ஸ்ரீ ஜெகன்நாதர், ஸ்ரீ பலபத்திரர், ஸ்ரீ சுபத்திரா ஆகிய தேரின் சிறப்புகயையும், அமைப்பு களைப் பற்றியும் விரிவாக பார்க்கலாம்...

## ஜகன்நாதர் தேரின் சிறப்புகள்...

ஸ்ரீ ஜகன்நாதரின் தேரின் பெயர், **நந்திகோஷா** (இதற்கு 'கருடத்வஜா' மற்றும் 'கபித்வஜா' என்ற வேறு பெயர்களும் உண்டு).

**தேரின் உயரம்:** 13.5 மீட்டர் (சுமார் 44 அடிகள்).

**நீளம் மற்றும் அகலம்:** 34'6" x 34'6" (34 அடி 6 அங்குலம்).

**சக்கரங்களின் எண்ணிக்கை:** 16 சக்கரங்கள் (ஒவ்வொரு சக்கரமும் 7 அடி விட்டம் கொண்டது).

பயன்படுத்தப்படும் மொத்தம் 832 மரத்துண்டு கள் இந்தத் தேரை உருவாக்கப் பயன்படுகின்றன.

தேர் முழுவதும் சிவப்பு மற்றும் மஞ்சள் நிறத் துணிகளால் மூடப்பட்டிருக்கும்.

மகாவிஷ்ணுவின் வாகனமான 'கருடன்' இந்த ரதத்தைக் காப்பதாக நம்பப்படுகிறது.

**தேரோட்டி (சாரதி):** 'தாஹுகா' ஆவார்.

**தேரின் கொடி:** தேரில் கட்டப்பட்டுள்ள கொடி யின் பெயர் 'திரைலோக்யமோகினி'.



**தேரை இழுக்கும் நான்கு மரக் குதிரைகளின் பெயர்கள்** – சங்க, பலாஹகா, சுவேதா மற்றும் ஹரிதாஷ்வா. aanmeegamalar.com

**வடம் (இழுக்கும் கயிறு):** தேரை இழுக்கப் பயன்படும் கயிற்றின் பெயர் 'சங்கசூடா'.

**தேரில் உள்ள தெய்வங்கள்:** நந்திகோஷா தேரில் ஒன்பது முதன்மைத் தெய்வங்கள் வீற்றி ருந்து அருள் பாலிக்கின்றனர்:

1.வராஹர், 2.கோவர்த்தனன், 3.கோபி கிருஷ்ணர், 4.நரசிம்மர், 5.ராமர், 6.நாராயணர், 7.திருவிக்ரமர், 8.அனுமன் 9.ருத்ரன்.

## பலபத்திரர் தேரின் சிறப்புகள்...

பகவான் ஜெகந்நாதரின் மூத்த சகோதரரான பகவான் பலபத்திரரின் தேரின் பெயர், **தாலத் வஜா.**

**தேரின் உயரம்:** 13.2 மீட்டர் (சுமார் 43.3 அடி கள்). aanmeegamalar.com

**நீளம் மற்றும் அகலம்:** 33' x 33' (33 அடி).

**சக்கரங்களின் எண்ணிக்கை:** 14 சக்கரங்கள் (ஒவ்வொரு சக்கரமும் 7 அடி விட்டம். மொத்தம் 763 மரத்துண்டுகள் இந்தத் தேரை உருவாக்கப் பயன்படுகின்றன. தேர் முழுவதும் சிவப்பு மற்றும் நீலப்பச்சை நிறத் துணிகளால் மூடப்பட்டிருக்கும். இத்தேரினை 'வாசுதேவர்' காப்பதாக நம்பப்படுகிறது.

**தேரோட்டி (சாரதி):** 'மாதலி' ஆவார்.

**தேரின் கொடி:** 'உன்னானி'.

**தேரை இழுக்கும் நான்கு மரக் குதிரைகளின் பெயர்கள்** — தீவ்ரா, கோரா, தீர்க்கசர்மா மற்றும்

ஸ்வர்ணநவா.

**வடம் (இழுக்கும் கயிறு):** தேரைஇழுக்கப் பயன்படும் வடத்தின் பெயர், பாம்புகளின் தலை வனாக திகழும் 'வாசுகி'.

**தேரில் உள்ள தெய்வங்கள்:** தாலத் வஜா தேரில் ஒன்பது முதன்மைத் தெய்வங்கள் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றனர்:



1.கணேசர், 2.கார்த்திகேயர், 3.சர்வமங்களா, 4.பிரலம்பாரி, 5.ஹதாயுதா, 6.மிருத்யுஞ்ஜயர், 7.நடம்பரா, 8.முக்தேஸ்வர், 9.ஆதிசேஷன்.

## சுபத்ரா தேவி தேரின் சிறப்புகள்...

பகவான் ஜெகந்நாதர் மற்றும் பலபத்திரரின் தங்கையான அன்னை சுபத்ரா தேவியின் தேரின் பெயர் **தர்பதலனா**. (இதற்கு '**பத்மத்வஜா**' என்ற வேறு பெயரும் உண்டு).

**தேரின் உயரம்:** 12.9 மீட்டர் (சுமார் 42.3 அடிகள்). மூன்று தேர்களில் இதுவே உயரம் குறைந்த தேராகும்.

aanmeegamalar.com

**நீளம் மற்றும் அகலம்:** 31'6" x 31'6" (31 அடி 6 அங்குலம்).

**சக்கரங்களின் எண்ணிக்கை:** 12 சக்கரங்கள் (ஒவ்வொரு சக்கரமும் 7 அடி விட்டம் கொண்டது). மொத்தம் 593 மரத்துண்டுகள் இந்தத் தேரை உருவாக்கப் பயன்படுகின்றன.

தேர் முழுவதும் சிவப்பு மற்றும் கருப்பு நிறத் துணிகளால் மூடப்பட்டிருக்கும். இத்தேரினை 'ஜெய துர்கா' தேவி காப்பதாக நம்பப்படுகிறது.

**தேரோட்டி (சாரதி):** 'அர்ஜுனன்'.

**தேரின் கொடி:** 'நடம்பிகா'.


**தேரை இழுக்கும் நான்கு மரக் குதிரைகளின் பெயர்கள்** – ரோச்சிகா, மோச்சிகா, ஜிதா மற்றும் அபராஜிதா.

**வடம் (இழுக்கும் கயிறு):** தேரை இழுக்கப் பயன்படும் கயிற்றின் பெயர் 'ஸ்வர்ணசூடா'.

**தேரில் உள்ள தெய்வங்கள்:** அன்னை சுபத்ரா வின் தேரில் வீற்றிருக்கும் ஒன்பது துணைக் காவல் தெய்வங்களும்பெண் தெய்வங்கள் (சக்தியின் வடிவங்கள்) என்பது இதன் சிறப்பம்ச மாகும்: 1.சண்டி, 2.சாமுண்டா, 3.உக்ரதாரா, 4.வன துர்கா, 5.சூலி துர்கா, 6.வாராஹி, 7.சியாமகாளி, 8.மங்களா, 9.விமலா.

– மாலதி சந்திரசேகரன்.





ஆன்மிகமலர்.காம்
இலவச
ஆன்மிக இ-புத்தகங்கள்!
ஆன்மிக விஷயங்களை, கோவில்கள்
வரலாற்றை, பாரம்பரிய வழிபாட்டு
முறைகளை, முன்னோர்களின் வழஙகள
மிக எளிமையாக புரிந்து கொள்ளும்,
இ-புத்தகம் வடிவில் மாதம் இரண்டு
இதழ்களை வெளியிட்டுவருகிறது.
இதுவரை வெளிவந்த
195 க்கும் மேற்பட்ட இதழ்களை
எந்தவித கட்டணமும் இன்றி
இலவசமாக படித்து மகிழ
195+
இதழ்கள்
இலவசம்
aanmeegamalar.com இணையதளத்தில்
இபுத்தகம் பகுயில் படித்து மகிழுங்கள்.







aanmeegamalar.com

# கோடி சித்தர்கள், வழிப்பாடு செய்த திருக்கோயில்



aanmeegamalar.com

"சித்தர்கள், மகான்கள், ஞானிகள் போன்றோர் உலக நன்மைக்காக தங்களை வருத்திக்கொண்டு வாழ்ந்த மகான்களாவார்கள்.

aanmeegamalar.com

இப்படிப்பட்ட சித்தர்கள், இந்த பூமியில் ஒன்று கூடி "ஒரு கோடி சித்தர்கள்" வழிபாடு செய்த கோயில் ஒன்று நம் தமிழகத்தில் உள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில், உள்ள "ஒரு கோடி" என்ற தலத்தில் உள்ள "ஒரு கோடி சிவன் ஆலயம்" ஆகும். விழுப்புரம் திருக்கோவிலூர் வழிதடத்தில் இந்த திருத்தலம் அமைந்துள்ளது.

ஒரு கோடி சித்தர்கள் வழிபாடு செய்துள்ளதால் இந்த ஊரின் பெயரே "ஒரு கோடி ஆகும்" இக் கோயிலின் மூலவர் "ஸ்ரீ கோடி கொடுத்த நாதர்", தாயார் "ஸ்ரீ ஒலை பதித்த நாயகி".

இக்கோயில் பல்லவ மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்டுள்ளது. கோயில் முழுவதும் "செங் கற்களை" கொண்டு கட்டியுள்ளார்கள்.



இங்கு ஒரு முக்கிய செய்தி, அதாவது இக்கோயிலில் இறைவனை தரிசிக்க வேண்டுமெனில்,... ஒரு சிறிய வாசல் வழியாக மட்டுமே தரிசிக்க முடியும். ஆம் உலகிலேயே "மிக சிறிய வாசல் கொண்ட சிவன் கோயில் இதுதான். தவிர இங்குள்ள "சிவலிங்கத்தை" ஒரு சிறிய துவாரத்தின் வழியாக மட்டுமே தரிசிக்க முடியும்.

இந்த கோயிலில் "ஒரு கோடி சித்தர்கள்" தவம் செய்து, தரிசித்து வழிபாடு செய்துள்ளார்கள் என்பது முக்கிய தகவல் ஆகும்.

ஆம் ஆன்மீக அன்பர்களே, சித்தர்கள் தவம் செய்து வழிபாடு செய்த கோயிலை நாமும் கண்டு, சிவன் அருள் பெறுவோம்.

**- K. R. G. SRIRAMAN,**
Bangalore 560 064
Mob : 99724 66443.

இதுவரை வெளிவந்த

200 க்கும் மேற்பட்ட

இதழ்களை

aanmeegamalar.com

இணையதளத்தில்
இலவசமாக
படிக்கலாம்

eBook DOWNLOAD free

Scan to Read
aanmeegamalar
e-book



# கட்டிக்குளம் தவத்திரு சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் 169-ஆம் ஆண்டு ஆடிபூராடம் அவதார விழா

சிவகங்கை மாவட்டம் மானா மதுரை அருகே உள்ள கட்டிக்குளம் கருப்பனேந்தல் மடத்தில் மகா சித்தர் சூட்டுக்கோல் மாயாண்டிசுவாமி தவசாலை கோவில் உள்ளது. இது சுவாமியின் முதல் ஜீவ ஒடுக்க ஸ்தலமாகும்.

aanmeegamalar.com

இங்கு மாதந்தோறும் அமாவாசை பௌர்ணமி மற்றும் பூராடம் நட்சத்திர தின நாட்களில் சிறப்பு பூஜைகள் அபிஷேகம் அன்னதானம் நடை பெறும்.

மேலும் தினந்தோறும் நித்ய அன்னதானமும் நடைபெறுகிறது. ஆண்டு தோறும் ஆடி பூராடம் நட்சத்திர நாளில் அவதார விழா நடைபெறும். 169–ஆம் ஆண்டு அவதார விழா ஜூலை 28 ந்தேதி செவ்வாய்க்கிழமை நடைபெறுகிறது.

சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள்தவசாலை முன்பு காலை 6மணிக்கு தொடங்குகிறது. அதை தொடர்ந்து சுவாமிக்கு பதினாறு வகையான மூலிகைகள் அபிஷேகம் விஷேச தீபாராதனை நடைபெறுகிறது.

aanmeegamalar.com

கட்டிக்குளம் கிராமத்தில் மகா சித்தர் மாயாண்டி சித்தர் பிறந்த பட்டமான் இல்லத்தில் சிறப்பு யாகமும் பூஜைகள் நடைபெறுகிறது.

கருப்பனேந்தல் மடம் தவச்சாலை யில் அமைந் துள்ள கட்டிக்குளம் ஸ்ரீ சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் முதலாவது ஜீவ ஒடுக்கமானஇடத்தில் ஸ்ரீ சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமி அவதாரவிழா சிவாச்சாரியார்களால் சிறப்பு வேள்வியாகமும் பூர்ணாஹூதி பூஜை, அபிஷேக ஆராதனைகளும், சிறப்பு அன்னதானமும் நடைபெறுகிறது.

அன்று இரவு பூப்பல்லக்கில் கட்டிக்குளம் ஸ்ரீ சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகளின் ஐம் பொன் திருவுருவம் வீதி உலா நடைபெறு கிறது. விழாவில் மதுரை, சிவகங்கை, விருது நகர்,




ராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் இருந்தும் மற்றும் தமிழகத்தில் உள்ள ஏராளமான பக்தர்கள், சிவனடியார்கள் கலந்து கொள்வார்கள். அவதார விழா ஏற்பாடுகளை சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் முதலாவது ஜீவ ஒடுக்க மான இடம் பரம்பரை தர்மகர்த்தா மற்றும்விழா குழுவினர் கிராமப் பொதுமக்கள் செய்து வருகின்றனர். aanmeegamalar.com

## மரணபயத்தை போக்கும் நீக்கும் மகா சித்தர்

கட்டிக் குளம் கருப்பனேந்தல் மடத்தில் மகா சித்தர் மாயாண்டி சுவாமி கள் முதல் ஜீவ ஒடுக்கம் உள்ளது. இங்கு உள்ள தவசாலையில் தன் சீடர்க்கு உள்ளங்கையில் காசி ராமேஸ்வரம் தரிசிக்க வைத்து ஆயுள் விருத்தி செய்து பல்வேறு அற்புதங்கள் நிகழ்த்தினார். இதேபோல் இங்கு உள்ள தவசாலை முன்பு தை அமாவாசை, ஆடி அமாவாசை, புரட்டாசி மஹாலயம் அமாவாசை தினங்களில் சிறப்பு மகாயாகம் நடைபெற்று வருகிறது. இதில் யாக ஜூவாலையில் மகா சித்தரே ஜோதி வடிவில் தோன்றுவதாக பக்தர்களால் நம்பப்படுகிறது.

அன்றைய தினத்தில் தமிழகம் முழுவதும் ஏராளமான பக்தர்கள் பிணிகள் தீர்த்து மரணபயத்தை போக்கி ஆயுள் விருத்தி அடைய வேண்டி மகா யாகத்தில் கலந்து கொண்டுள்ளார். இதில் கலந்து கொண்ட பக்தர்கள் அனைவருக்கும் நோய் குணமாகியும், திருமணம் தடை நீங்கியும், குழந்தை வரம் வேண்டி வருபவர்களுக்கும் கை மேல் பலன் கிடைத்ததாக இங்கு வரும் பக்தர்கள் இப்போதும் கூறுகின்றனர். அதேபோல் ஏராளமானோர் மகா சித்தர் மாயாண்டி சுவாமிகள் ஆசியால் அரசு வேலை கிடைக்க பெற்று உள்ளனர். இங்கு நடைபெறும்அன்னதான சேவைகளை அரசு வேலை பெற்றவர்கள் இன்றும் செய்து வருகின்றனர். aanmeegamalar.com




சூட்டுக்கோல் மாயண்டி சுவாமியை தரிசிக்க வந்த தமிழக மின்துறை அமைச்சர் சி.டி.நிர்மல்குமார் அவர்கள், ஆன்மிகமலர். காம் இதழை பார்வையிட்டு, ஆன்மிகமலர்.காம் இணையதளத்தின் சேவையை பாராட்டினார்.

## சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகளின் அற்புதங்கள்

மதுரை வடக்கு மாசி வீதியைச் சேர்ந்த தவ திரு இருளப்பகோனார் தனது இருபத்தி ஆறாம் வயதில் ஆயுள் முடியும் என்றும் அதற்க்கு காசி ராமேஸ்வரம் சென்று பரிகாரம் செய்தால் ஆயுள் கூடும் என்று ஜோதிடத்தின் மூலம் அறிந்தார் இதனை தெரிந்த சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் கட்டிக்குளம் கருப்பனேந்தல் மடத்திற்க்கு அழைத்து சென்று ஒரு மண்டலம் தவச்சாலைக்குள் சென்று தவநிலை அடைந்தார் அப்போது தவச்சாலை மேல் பலகைகள் போட்டு மூடப்பட்டு இருந்தது 48 நாட்களுக்கு பிறகு அங்கு தவ நிலையிலையே இருளப்ப கோனாருக்கு உள்ளங்கையில் காசி, ராமேஸ்வரம் கோவில்களை காண்பித்து இனி எத்துன்பமும் இல்லை எனக் கூறி அருள் ஆசி வழங்கினார். தன் சீடரின் இறப்பு நிலையை தானே ஏற்று தன் அருளால் அதனை போக்கி ஆயுள் நீட்டித்து பல அற்புதங்கள் புரிந்தார். aanmeegamalar.com



அழகுராஜா

மார்நாடு கண்மாய் கரையில் யாருக் கும் தெரியாமல் சிவன், அம்மன் கோவிலும் மண் மூடி புதைந்து இருந் தது இதனை அறிந்த சுவாமிகள் அவ்வூர் மக்களுக்கு தெரிய படுத்திய போது சுவாமி கூறிய இடத்தில் மணல் மேடுகளை

# தேவரின் பிறப்பை முன்கூட்டியே கணித்த சித்தர்

பசும்பொன் முத்துராமலிங்க தேவர் பிறப்பை கூறிய சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் கிராமத்தை சேர்ந்த உக்கிர பாண்டி தேவருக்கும் இந்திராணி அம்மையாருக்கும் நீண்ட நாட்களாக குழந்தை இல்லை தம்பதிகள் இருவரும் மாரநாடு கருப்பன சாமி கோவிலில் மாசி களரி விழாவிற்கு சென்று சாமி தரிசனம் செய்துவிட்டு கருப்பனேந்தல் மடம் வழியாக வில் வண்டியில் வந்து கொண்டு இருந்தனர். aanmeegamalar.com

அப்போது தம்பதிகள் இருவரும் கருப்பனேந்தல் மடத்தில் தியானத்தில் இருந்த சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமியை தரிசிக்கின்றனர்.

அப்போது கண்விழித்த சுவாமிகள் அவர்களை பார்த்த உடன் 56 ஊர் களுக்கு சொந்த காரர்கள் நீங்கள் இந்த சாதாரணமான வரை தேடி வந்து இருக்கிறீர்கள் என்று சொன்னவுடன் தம்பதிகள் இருவரும் எங்களுக்கு பிள்ளை வரம் வேண்டும் என கேட்டனர்.

சற்று நேரம் கண் மூடி தவ நிலையில் இருந்த சுவாமிகள் புன்னகையுடன் கண் திறந்து உங்களுக்கு ஊர் போற்றும் பிள்ளை தான் வேண்டுமா எனக்கேட்டார்.

அவர்கள் இருவரும் எங்களுக்கு ஊர் போற்றும் பிள்ளை தான் வேண்டும் என்ற தெரிவித்த உடன் அவர்ளை பார்த்து தேவரே உங்களின் மனைவியின் வயிற்றில் ஒரு முத்து இருக்கிறது அது அடுத்த வருடம் குழந்தையாக பிறக்க போகிறது அந்த முத்து ஊர் அல்ல உலகம் போற்றும். அதனால் அந்த குழந்தைக்கு என் ஆதி குரு நாதர் ஞான சித்தர் ராமலிங்கம் பெயரையும் சேர்த்து வையுங்கள் என கூறி ஆசி வழங்கினார். aanmeegamalar.com



மாயாண்டி சுவாமிகள் கூறிய படியே அடுத்த ஆண்டே ஆண் குழந்தை பிறந்தது அக்குழந்தைக்கு சுவாமி கூறிய படியேமுத்துராமலிங்கம் என பெயரிட்டு மகிழ்ந் தனர்.

அக்குழந்தை தான் தேசியத்தையும், தெய் வீகத்தை யும் தனது இரு கண்களாக கொண்ட இந்தியா வில் புகழ்பெற்ற **பசும்பொன் முத்துராம லிங்க தேவர்** ஆவார்.

அகற்றிய போது சிவன் கோவில் தென்பட்டது. அதன் பின் சுவாமி அருள் வாக்கின் படி கோவி லை சீரமைத்து கும்பாபிஷேகம் நடத்தப் பட்டு இப்போதும் பக்தர்கள் வழிபட்டு வருகின்றனர்.

சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள்ஒரு முறை நாகப்பட்டினத்தில் திருமுருக கிருபானந்த வாரியாரை சந்தித்த போது சுவாமிகள் வாரியாரை பார்த்து உன் பேச்சை பணம்கொடுத்துகேப் பாங்க உன் சொற்பொழிவை கேக்க ஏராளமா னோர் கூடுவார்கள் ஆன்மீக பணியில் உன் தொண்டு உலகத்திற்கே இன்றி அமையாததுபல தொண்டுகள் செய் அப்பு என்று ஆசி வழங்கி னார். aanmeegamalar.com

சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் மாயமாய் மறையக்கூடிய தன்மை பெற்ற வர் ஒரே நாளில் ஒரே நேரத்தில் பர்மா உட்பட தமிழகத்தில் பல்வேறு ஊர்களில் காட்சி அளிக்கும் வல்லமை பெற்றவர் என பக்தர்களால் கூறப்படுகிறது. கட்டிக்குளம் கருப்பனேந்தல் மடத்தில் அமாவாசை, பவுர்ணமி அன்று நடத்தப் படும் யாக வேள்வியில் ஜோதி ரூபமாக பக்தர்களுக்கு காட்சி தருகிறார் இதை பார்த்த ஏராளமான பக்தர்கள் தங்களது செல்போனில் போட்டோ மற் றும் வீடியோவாக எடுத்து வைத்து வழிபடுகின்றனர்.

சுவாமிகள் தான் செல்லும் இடங்களில் எல்லாம் கல்லிலும் முள்ளிளும் கற்றாழைசெடியிலும் படுத்துக் கொண்டு பக்தர்களுக்கு ஆசி வழங் கினார் அவர் சென்ற இடங்களில் எல்லாம்முள் படுக்கையே விரும்பினார் அப்போது கூறும் அருள்வாக்கினால் ஏராளமான பக்தர்கள்நல்ஆசி பெற்று நற்பயன் அடைந்ததாக பக்தர்களால் கூறப்படுகிறது. அவர் சென்ற இடங்களில் எல்லாம் தற்போது அன்னதான மடங்களாகஉள்ளது.

சித்தரின் ஜீவ சமாதி திருப்பரங்குன்றம் திரு கூடல் மலையில் உள்ளது இங்கு ஆண்டு தோறும் குருபூசை விழா நடைபெறும். சூட்டுக் கோல் மாயாண்டி சுவாமிகளால் நிறுவப்பட்ட நவநீத பெருமாள் மதுரை ஆரப்பாளையத்தில் இருந்து புறப்பட்டு சுமார் 25 ஊர்களில் வலம் வந்து திருகூடல் மலைக்கு வந்து சேருகிறது சுமார் 24 நாட்கள் நவநீத பெருமாள் வலம் வரும் போது ஏராளமான பக்தர்கள் சூட்டுக் கோல் மாயாண்டி சுவாமிகளே நேரடியாக தங்கள் ஊர்களுக்கு வருவதாக வணங்கி வரவேற்பு கொடுப்பார்கள்.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182

e-magazine
aanmeegamalar.com

கட்டாய சந்தா இல்லை!

சப்ஸ்கிரைப் இல்லை!!

மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

ஆன்மிகமலர்.காம் வழங்கும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகம்
ஒரே கிளிக் 200 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# கடவுளிடம் விருப்பம் ஏன் குறைந்தது

சீடன்: கர்ம யோகி ஏன் பாராட்டப்படு கிறான்?

ஞானி: அவன் வாழ்வில் ஆர்வம் கடமை உணர்வு, தியாகம் இருப்பதால்.

சீடன்: தெய்வீகத்திற்கு எது தேவை?

ஞானி: எதற்கு உறுதி வேண்டும். அறிவு வேண்டும். சந்தேகம் கூடாது.

சீடன்: எது உத்தமமான நிலை?

ஞானி: பிறந்தபின் விடுதலை பெறுவது.

சீடன்: இதற்கு எளிய வழி எது சுவாமி?

ஞானி: உயிரின் நினைவு. அது உன்னை உணர்வோடு இணைக்கும் நான் என்ற உடல் அபிமானத்தைப் போக்கும்.

சீடன்: யாரால் வளரமுடியாது?

ஞானி: ஆன்ம அறிவு இல்லாதவன் உடல் பற்றை விடாதவன்.

சீடன்: உருவக் கடவுளை அறிய எது தேவை?

ஞானி: ஞானம். இல்லையேல் அறிவுடன் குழம்பி தவிப்பாய்.

சீடன்: குரு எதற்குத் தேவை?

ஞானி: வாழ்வை உயிருடன் இணைத்து உணர.

சீடன்: பிரும்மம் என்றால் என்ன?

ஞானி: ஞானம் பெற்ற உயிர்.

சீடன்: மதநூல்கள் எதற்கு உத வுகிறது?

ஞானி: கடவுள் ஞானமும் மத நியாயமும் தெரிந்து கொள்ள.

சீடன்: கர்மயோகம் என்றால் என்ன?

ஞானி: வேலையோடு தொழிலோடு பக்தி இணைவதுதான்.

சீடன்: கீதையில் கண்ணன் சொல்வது இது தானே.

ஞானி: ஆமாம். மனச்சோம்பல் இன்றி வேலை செய். பக்தி வைத்தால் வேலையில் பலனுண்டு. இதுதான் கண்ணன் கருத்து.

சீடன்: பின் பூஜைகள், யாகங்கள் எதற்கு?

aanmeegamalar.com

ஞானி: அது இன்னொரு வழி. மனிதன் மனதினால் கடவுளை இயக்கலாம் என்பதே அதன் வழி.

சீடன்: அறிவு என்றால் என்ன?

ஞானி: பிரபஞ்சத்தைப் பற்றி இறைவனைப் பற்றி எல்லையில்லாமல் தெரிந்து கொள்ள தேவைப்படும் ஞானத்திற்கு அறிவு எனப்படும்.

சீடன்: அனுஷ்டானம் என்றால் என்ன?

ஞானி: தினம் தினம் ஆண்டவனை வழிபடுவது.

சீடன்: விஞ்ஞானி என்பவன் யார்?

ஞானி: காலத்தைக் கடந்தவன். காலத்தை வெல்லத்தான் மனிதன் காலமெல்லாம் முயலுகிறான்.

சீடன்: புண்ணியம் என்றால் என்ன?

ஞானி: நம்மைப் பற்றி நமக்கே புரிவதுதான்.

சீடன்: பக்தன் எப்பொழுது உருவாகிறான்?



ஞானி: மனம்ஆண்டவனுக்காகச் செயல்படும்போது.

சீடன்:தியானம் என்றால் என்ன?

ஞானி: மனதோடு சம்பந்தப்பட்ட அனைத்து பயிற்ச்சிகளுக்கும் தியானம் எனப்படும்.

சீடன்: ஞானம் உருவாக வழி என்ன சுவாமி?

e-magazine
aanmeegamalar.com




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல்
♦♦♦
வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
9444228203


ஞானி: மனச்சோம்பல் அகன்றால் தன் மூளையையே கவனிக்காமல், அது ஞானம் உருவாக வழி.

சீடன்: குண்டலினி யோகம் என்றால் என்ன?

ஞானி: உடலையும் மனதையும் சேர்ப்பது குண்டலினி.

சீடன்: கடவுளை செயற்கை எனக் கூறுகிறார்களே?

ஞானி: மறைந்திருந்த கடவுளை மனிதன் கண்டுபிடித்ததால் அதை செயற்கை என்று சொல்லக் கூடாது.

சீடன்: பக்திக்கு உலகைத் துறக்க வேண்டுமா?

ஞானி: உலக அனுபவம் பெற்ற பின்புதான் பக்தி அனுபவமே தோன்றுகிறது.

சீடன்: பூஜைகள் கட்டாயம் செய்ய வேண்டுமா?

ஞானி: பூஜை செய்ய ஆசைப்படாதே. 'விருப்பத்தைத் தா' என்று எண்ணி பிரார்த்தனை செய்.

சீடன்: கடவுளைப் பற்றி எல்லோரும் பேசுகின்றனரே?

ஞானி: கடவுளைப் பார்க்காதவனுடன் கடவுளைப் பற்றி பேசுவது திண்ணைப் பேச்சு.

aanmeegamalar.com

சீடன்: சமயம் எப்படி இருத்தல் வேண்டும்?

ஞானி: உணர்ச்சிகளோடு அணுகும் விஷயம் இல்லை சமயம். மனிதன் எல்லா விஷயங்களையும் உணர்ச்சிகளோடுதான் அணுகுவதால் சமயத்தில் குழப்பம் தோன்றுகிறது.

aanmeegamalar.com

சீடன்: தத்துவங்கள் தேவையா?

ஞானி: தேவைதான். ஆனால் தத்துவங்களை வைத்து ஆராய்ச்சிதான் செய்யலாம். முடிவு செய்ய முடியாது.

சீடன்: கடவுளை ஆராயலாமா?

ஞானி: பஞ்ச பூதங்களில் பரவிக்கிடந்து மறைந்திருக்கிறான் இறைவன். பல உண்மைகளை இயற்கை மறைக்கும். இயற்கையை வைத்துத்தான் கடவுளை ஆராய முடியும்.

சீடன்: கேள்வி எப்படி இருக்க வேண்டும்?

ஞானி: அறிவுடன்.

சீடன்: விருப்பம் ஏன் குறைந்தது கடவுளிடம்?

ஞானி: முறை தப்பியதால்.

சீடன்: இந்து மதம் என்றால் எதைக் குறிக்கிறது?

ஞானி: மனிதனின் பரிணாம வளர்ச்சியை.

சீடன்: கல்விக்கும் கடவுளுக்கும் எது அடிப்படை?

ஞானி: விருப்பம் என்பதே அடிப்படை.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028



நீங்களும்
பத்திரிகையாளர்
ஆகலாம்....!!!
PRESS
NEWS
உங்கள் செய்தி...
உலகம் அறிய...
தினசரி நாளிதழ், வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
குறைந்த செலவில்
தரமாக வடிவமைத்து தருகிறோம்...
புதிய திட்டங்கள்
மக்கள் நலனுக்கு
வாரமலர்
மாத இதழ்
குறைந்த
செலவில்
தரம்
உறுதி!
முன்னணி பத்திரிகையாளர்கள்
செய்திகள், கட்டுரைகள்,
கார்ட்டூன்களை,
அதிகாரப்பூர்வமாக பயன்படுத்தி,
உலகத் தரத்திலான
வடிவமைப்பில் நாளிதழ்ககளை
தயாரித்து தருகிறோம்...
e-book, e-paper,
printing பயன்பாட்டிற்கு ஏற்ப
நேர்த்தியாகவும், அழகாகவும்
தயாரித்து தருகிறோம்.
மேலும் விபரங்களுக்கு
9444228203
என்ற வாட்சப் எண்ணிற்கு
மெசேஜ் மட்டும் அனுப்பவும்...
இமெயில் முகவரி
bhaanrajagraphics@gmail.com
தொழில்முறை
செய்திவமைப்பு
அழகான
வடிவமைப்பு
தரமான
அச்சு
நேர்த்தியான
விநியோகம்
முழுமையான
ஆதரவு
உங்கள் செய்தி... உங்கள் குரல்... உலகம் முழுவதும் சேரட்டும்!

# ஆன்மிகமலர் .காம்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

## இதுவரை வெளிவந்த 195க்கும் மேற்பட்ட இதழ்களை

## எந்தவித கட்டணமும் இன்றி இலவசமாக படித்து மகிழ!




**aanmeegamalar.com** இணையதளத்தில்

## இபுத்தகம் பகுதியில் படித்து மகிழுங்கள்!

www.aanmeegamalar.com


aanmeegamalar.com e-magazine